Project Madurai

மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்

***

# tEvAram of tirunAvukkaracu cuvAmikaL
## tirumuRai 4 part - 1
## Poems (1- 487)

***

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த
## தேவாரப் பதிகங்கள் நான்காம் திருமுறை
## முதற் பகுதி பாடல்கள் (1-487)

***

Etext in Tamil Script - TSCII format (v. 1.7)
Etext preparation: Dr. Thomas Malten and colleagues, Univ. of Koeln, Germany;
Proof-reading: Mr. P.K. Ilango, Erode, Tamilnadu, India
Etext prep in pdf format: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland

This pdf file is based on TSCInaimathi font embedded in the file.
Hence this file can be viewed and printed on all computer platforms:
(Windows, Macintosh and Unix) without the need to have the font installed in your computer.

© Project Madurai 2003

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

தேவாரப்பதிகங்கள் நான்காம் திருமுறை

முதற் பகுதி, பாடல்கள் (1 -

நான்காம் திருமுறை து முதற்


| பதிகம் | பாடல்கள் | |
|---|---|---|
| 4.1 திருவதிகைவீரட்டானம் | 1 | 10 |
| 4.2 திருக்கெடிலவடவீரட்டானம் | 11 | 20 |
| 4.3 திருவையாறு | 21 | 31 |
| 4.4 திருவாரூர் | 32 | 41 |
| 4.5 திருவாரூர்ப்பழமொழி | 42 | 51 |
| 4.6 திருக்கழிப்பாலை | 52 | 61 |
| 4.7 திருஏகம்பம் | 62 | 71 |
| 4.8 சிவனெனுமோசை | 72 | 81 |
| 4.9 திருஅங்கமாலை | 82 | 93 |
| 4.10 திருக்கெடிலவாணர் | 94 | 103 |
| 4.11 நமச்சிவாயப்பதிகம் | 104 | 113 |
| 4.12 திருப்பழனம் | 114 | 123 |
| 4.13 திருவையாறு | 124 | 133 |
| 4.14 தசபுராணம் | 134 | 144 |
| 4.15 பாவநாசத்திருப்பதிகம் | 145 | 155 |
| 4.16 திருப்புகலூர் | 156 | 165 |
| 4.17 திருவாரூர் - அரநெறி | 166 | 176 |
| 4.18 விடந்தீர்த்ததிருப்பதிகம் | 177 | 186 |
| 4.19 திருவாரூர் | 187 | 197 |
| 4.20 திருவாரூர் | 198 | 207 |
| 4.21 திருவாரூர்திருவாதிரைப்பதிகம் | 208 | 217 |
| 4.22 கோயில் | 218 | 228 |
| 4.23 கோயில் | 229 | 238 |
| 4.24 திருவதிகைவீரட்டானம் | 239 | 248 |
| 4.25 திருவதிகைவீரட்டானம் | 249 | 258 |
| 4.26 திருவதிகைவீரட்டானம் | 259 | 268 |
| 4.27 திருவதிகைவீரட்டானம் | 269 | 277 |
| 4.28 திருவதிகைவீரட்டானம் | 278 | 283 |
| 4.29 திருச்செம்பொன்பள்ளி | 284 | 293 |
| 4.30 திருக்கழிப்பாலை | 294 | 303 |
| 4.31 திருக்கடவூர் | 304 | 313 |
| 4.32 திருப்பயற்றூர் | 314 | 323 |
| 4.33 திருமறைக்காடு | 324 | 333 |
| 4.34 திருமறைக்காடு | 334 | 343 |
| 4.35 திருவிடைமருது | 344 | 353 |
| 4.36 திருப்பழனம் | 354 | 363 |

| | | |
|---|---|---|
| 4.37 திருநெய்த்தானம் | 364 | 373 |
| 4.38 திருவையாறு | 374 | 383 |
| 4.39 திருவையாறு | 384 | 393 |
| 4.40 திருவையாறு | 394 | 403 |
| 4.41 திருச்சோற்றுத்துறை | 404 | 413 |
| 4.42 திருத்துருத்தி | 414 | 423 |
| 4.43 திருக்காஞ்சிமேற்றளி | 424 | 433 |
| 4.44 திருஏகம்பம் | 434 | 443 |
| 4.45 திருவொற்றியூர் | 444 | 453 |
| 4.46 திருவொற்றியூர் | 454 | 455 |
| 4.47 திருக்கயிலாயம் | 456 | 465 |
| 4.48 திருஆப்பாடி | 466 | 475 |
| 4.49 திருக்குறுக்கை | 476 | 485 |
| 4.50 திருக்குறுக்கை | 486 | 487 |

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த
# தேவாரப் பதிகங்கள் நான்காம் திருமுறை
# முதற் பகுதி பாடல்கள் ( 1 - 487

## 4.1 திருவதிகைவீரட்டானம்

பன் -
திருச்சிற்றம்பலம்

1 கூற்றாயின வாறுவி
 கொடுமைபல செய்தன
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
 பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
 குடரோடு துடக்கி
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
 வீரட்டா னத்துறை அம்மானே. 01

2 நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
 நினையாதொரு போதும்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
 வயிற்றோடு துடக்கி
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
 நணுகாமல் துரந்து கரந்துமிடா்
அஞ்சேலுமென் னீர்அதி கைக்கெடில
 வீரட்டா னத்துறை அம்மானே. 02

3 பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
 படுவெண்டலை யிற்பலி
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
 சுடுகின்றது சூலை
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
 பெற்றமேற்றுகந் தீர்சுற்றும்
டணிந்தீரடி கேள்அதி கைக்கெடில
 வீரட்டா னத்துறை அம்மனே. 03

4 முன்னம்மடி யேன்அறி யாமையினான்
 முனிந்தென்னை நலிந்து
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
 சுடுகின்றது சூலை
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
 தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
 வீரட்டா னத்துறை அம்மானே. 04

5 காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற்
 கரைநின்றவர் கண்டுகொ
நீத்தாய கயம்புக நூக்கியிட
 நிலைக்கொள்ளும் வழித்துறை
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
 வயிற்றோடு துடக்கி
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில
 வீரட்டா னத்துறை அம்மானே. 05

6 சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவின்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 06

7 உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவலி
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை
பயந்தேயென் வயிற்றின கம்படியே
பறித்துப்புரட் டியறுத்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே. 07

8 வலித்தேன்மனை வாழ்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 08

9 பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது
அன்பேஅமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 09

10 போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யான
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 10

இத்தலம் நடுநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -
இப்பதிகம் சூலைநோய்தீர ஓதியருளியது.

திருச்சிற்றம்பலம்

*****************************

## 4.2 திருக்கெடிலவடவீரட்டானம்*

பண் -
*திருவதிகைவீரட்டானம் என்பதும் இது

திருச்சிற்றம்பலம்

11 சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்
சுடர்த் திங்கட்
வண்ண உரிவை யுடையும்
வளரும் பவள
அண்ணல் அரண்முர ணேறும்
அகலம் வளாய
திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 01

12 பூண்டதோர் கேழல் எயிறும்
பொன்றிகழ் ஆமை
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து
நிலாக்கதிர் போலவெண்
காண்டகு புள்ளின் சிறகுங்
கலந்தகட் டங்கக்
ஈண்டு கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 02

13 ஒத்த வடத்திள நாகம்
உருத்திர பட்ட
முத்து வடக்கண் டிகையும்
முளைத்தெழு மூவிலை
*சித்த வடமும் அதிகைச்
சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 03

*சித்தவடம் என்பது இத்தலத்துக்குச்
சமீபத்திலிருப்பது.

14 மடமான் மறிபொற் கலையும்
மழுபாம் பொருகையில்
குடமால் வரைய திண்டோளுங்
குனிசிலைக் கூத்தின்
இடமால் தழுவிய பாகம்
இருநில னேற்ற
தடமார் கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 04

15 பலபல காமத்த ராகிப்
பதைத்தெழு வார்மனத்
கலமலக் கிட்டுத் திரியுங்

கணபதி யென்னுங்
வலமேந் திரண்டு சுடரும்
வான்கயி லாய
நலமார் கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதென்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 05

16 கரந்தன கொள்ளி விளக்குங்
கறங்கு துடியின்
பரந்த பதினெண் கணமும்
பயின்றறி யாதன
அரங்கிடை நூலறி வாளர்
அறியப் படாததோர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 06

17 கொலைவரி வேங்கை அதளுங்
குலவோ டிலங்குபொற்
விலைபெறு சங்கக் குழையும்
விலையில் கபாலக்
மலைமகள் கைக்கொண்ட மார்பும்
மணியார்ந் திலங்கு
உலவு கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 07

18 ஆடல் புரிந்த நிலையும்
அரையில் அசைத்த
பாடல் பயின்ற பல்பூதம்
பல்லா யிரங்கொள்
நாடற் கரியதோர் கூத்தும்
நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 08

19 சூழு மரவத் துகிலுந்
துகில்கிழி கோவணக்
யாழின் மொழியவள் அஞ்ச
அஞ்சா தருவரை
வேழ முரித்த நிலையும்
விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 09

20 நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க
உரங்களெல் லாங்கொண் டெடுத்தான்
ஒன்பதும் ஒன்றும்
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து

நிரம்பு கெடிலப் புனலும்
உடையா ரொருவர்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை. 10

இப்பதிகம் சமணர்களேவிய யானை
அஞ்சும்படி ஓதி அருளியது.

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.3 திருவையாறு

பண் -
திருச்சிற்றம்பலம்

21 மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 01

22 போழிளங் கண்ணியி னானைப்
பூந்துகி லாளொடும்
வாழியம் போற்றியென் றேத்தி
வட்டமிட் டாடா
ஆழி வலவனின் றேத்தும்
ஐயா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக்
குளிர்ந்து வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 02

23 எரிப்பிறைக் கண்ணியி னானை
யேந்திழை யாளொடும்
முரித்த இலயங்க ளிட்டு
முகமலர்ந் தாடா
அரித்தொழு கும்வெள் ளருவி
ஐயா றடைகின்ற போது
வரிக்குயில் பேடையொ டாடி
வைகி வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 03

24 பிறையிளங் கண்ணியி னானைப்
பெய்வளை யாளொடும்
துறையிளம் பன்மலர் தூவித்
தோளைக் குளிரத்
அறையிளம் பூங்குயி லாலும்
ஐயா றடைகின்ற போது
சிறையிளம் பேடையொ டாடிச்

சேவல் வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 04

25 ஏடு மதிக்கண்ணி யானை
ஏந்திழை யாளொடும்
காடொடு நாடு மலையுங்
கைதொழு தாடா
ஆட லமர்ந்துறை கின்ற
ஐயா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப்
பிணைந்து வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 05

26 தண்மதிக் கண்ணியி னானைத்
தையல்நல் லாளொடும்
உண்மெலி சிந்தைய னாகி
உணரா வுருகா
அண்ண லமர்ந்துறை கின்ற
ஐயா றடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொ டாடி
வைகி வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 06

27 கடிமதிக் கண்ணியி னானைக்
காரிகை யாலொடும்
வடிவொடு வண்ண மிரண்டும்
வாய்வேண் டுவசொல்லி
அடியிணை ஆர்க்குங் கழலான்
ஐயா றடைகின்ற போது
இடிகுர லன்னதோர் ஏனம்
இசைந்து வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 07

28 விரும்பு மதிக்கண்ணி யானை
மெல்லிய லாளொடும்
பெரும்புலர் காலை யெழுந்து
பெறுமலர் கொய்யா
அருங்கலம் பொன்மணி யுந்தும்
ஐயா றடைகின்ற போது
கருங்கலை பேடையொ டாடிக்
கலந்து வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 08

29 முற்பிறைக் கண்ணியி னானை
மொய்குழ லாளொடும்
பற்றிக் கயிறறுக் கில்லேன்
பாடியும் ஆடா
அற்றருள் பெற்றுநின் றாரோ
டையா றடைகின்ற போது
நற்றுணைப் பேடையொ டாடி
நாரை வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 09

30 திங்கள் மதிக்கண்ணி யானைத்
தேமொழி யாளொடும்
எங்கருள் நல்குங்கொ லெந்தை
எனக்கினி யென்னா
அங்கிள மங்கைய ராடும்
ஐயா ரடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப்
பறந்து வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 10

31 வளர்மதிக் கண்ணியி னானை
வார்குழ லாளொடும்
களவு படாததோர் காலங்
காண்பான் கடைக்கணிக்
அளவு படாததோ ரன்போ
டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி
ஏறு வருவன
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன். 11

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -
இது இந்தத்தலத்திலிருக்கும் ஆலயமே,
கயிலாசமாகச் சுவாமி
யிட்டபோது ஓதியருளிய

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.4 திருவாரூர்

பண் -
திருச்சிற்றம்பலம்

32 பாடிளம் பூதத்தி னானும்
பவளச்செவ் வாய்வண்ணத்
கூடிள மென்முலை யாளைக்
கூடிய கோலத்தி
ஓடிள வெண்பிறை யானும்
ஒளிதிகழ் சூலத்தி
ஆடிளம் பாம்பசைத் தானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 01

33 நரியைக் குதிரைசெய் வானும்
நரகரைத் தேவுசெய்
விரதங்கொண் டாடவல் லானும்
விச்சின்றி நாறுசெய்
முரசதிர்ந் தானை முன்னோட
முன்பணிந் தன்பர்கள்
அரவரைச் சாத்திநின் றானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 02

34 நீறுமெய் பூசவல் லானும்
நினைப்பவர் நெஞ்சத்து
ஏறுகந் தேறவல் லானும்
எரிபுரை மேனியி
நாறு கரந்தையி னானும்
நான்மறைக் கண்டத்தி
ஆறு சடைக்கரந் தானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 03

35 கொம்புநல் வேனி லவனைக்
குழைய முறுவல்செய்
செம்புனல் கொண்டெயில் மூன்றுந்
தீயெழக் கண்சிவந்
வம்புநற் கொன்றையி னானும்
வாட்கண்ணி வாட்டம
அம்பர ஈருரி யானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 04

36 ஊழி யளக்கவல் லானும்
உகப்பவர் உச்சியுள்
தாழிளஞ் செஞ்சடை யானுந்
தண்ணமர் திண்கொடி
தோழியர் தூதிடை யாடத்
தொழுதடி யார்கள்
ஆழி வளைக்கையி னானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 05

37 ஊர்திரை வேலையுள் ளானும்
உலகிறந் தொண்பொரு
சீர்தரு பாடலுள் ளானுஞ்
செங்கண் விடைக்கொடி
வார்தரு பூங்குழ லாளை
மருவி யுடன்வைத்
ஆதிரை நாளுகந் தானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 06

38 தொழற்கங்கை துன்னிநின் றார்க்குத்
தோன்றி யருளவல்
கழற்கங்கை பன்மலர் கொண்டு
காதல் கனற்றநின்
குழற்கங்கை யாளையுள் வைத்துக்
கோலச் சடைக்கரந்
அழற்கங்கை ஏந்தவல் லானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 07

39 ஆயிரந் தாமரை போலும்
ஆயிரஞ் சேவடி
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரந் தோளுடை
ஆயிர ஞாயிறு போலும்
ஆயிர நீண்முடி
ஆயிரம் பேருகந் தானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 08

40 வீடரங் காநிறுப் பானும்
விசும்பினை வேதி
ஓடரங் காகவைத் தானும்
ஓங்கியோ ரூழியுள்

காடரங் காமகிழ்ந் தானுங்
காரிகை யார்கள் மனத்துள்
ஆடரங் கத்திடை யானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 09

41 பையஞ் சுடர்விடு நாகப்
பள்ளிகொள் வானுள்ளத்
கையஞ்சு நான்குடை யானைக்
கால்விர லாலடர்த்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்
புகழ்புரிந் தார்க்கருள்
ஐயஞ்சின் அப்புறத் தானும்
ஆரூ ரமர்ந்தஅம் மானே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.5 திருவாரூர்ப்பழமொழி

பண் -
திருச்சிற்றம்பலம்

42 மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ
உய்யலா மென்றெண்ணி உறிதூக்கி
யுழிதந்தென் உள்ளம்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூ
கையினாற் றொழா தொழிந்து
கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே. 01

43 என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்
டென்னையோர் உருவ
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்
டென்னுள்ளங் கோயி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்
டருள்செய்த ஆரூ
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே. 02

44 பெருகுவித்தென் பாவத்தைப் பண்டெலாங்
குண்டர்கள்தஞ் சொல்லே
உருகுவித்தென் உள்ளத்தின் உள்ளிருந்த
கள்ளத்தைத் தள்ளிப்
அருகுவித்துப் பிணிகாட்டி ஆட்கொண்டு
பிணிதீர்த்த ஆரூ
அருகிருக்கும் விதியின்றி அறமிருக்க
மறம்விலைக்குக் கொண்ட வாறே. 03

45 குண்டானாய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைகாணா துழிதர்
பண்டமாப் படுத்தென்னைப் பால்தலையிற்
றெளித்துத்தன் பாதங்
தொண்டெலா மிசைபாடத் தூமுறுவல்
அருள்செய்யும் ஆரூ
பண்டெலாம் அறியாதே பனிநீராற்
பரவைசெயப் பாவித் தேனே. 04

46 துன்னாகத் தேனாகித் துர்ச்சனவர்
சொற்கேட்டுத் துவர்வாய்க்
என்னாகத் திரிதந்தீங் கிருகையேற்
றிடவுண்ட ஏழை
பொன்னாகத் தடியேனைப் புகப்பெய்து
பொருட்படுத்த ஆரூ
என்னாகத் திருத்தாதே ஏதன்போர்க்
காதனாய் அகப்பட் டேனே. 05

47 பப்போதிப் பவணனாய்ப் பறித்ததொரு
தலையோடே திரிதர்
ஒப்போட வோதுவித்தென் உள்ளத்தின்
உள்ளிருந்தங் குறுதி
அப்போதைக் கப்போதும் அடியவர்கட்
காரமுதாம் ஆரூ
எப்போது நினையாதே இருட்டறையின்
மலடுகறந் தெய்த்த வாறே. 06

48 கதியொன்றும் அறியாதே கண்ணழலத்
தலைபறித்துக் கையில்
பதியொன்று நெடுவீதிப் பலர்காண
நகைநாணா துழிதர்
மதிதந்த ஆரூரில் வார்தேனை
வாய்மடுத்துப் பருகி
விதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க
மின்மினித்தீக் காய்ந்த வாறே. 07

49 பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற
சமண்நீசர் சொல்லே
காவிசேர் கண்மடவார்க் கண்டோடிக்
கதவடைக்குங் கள்வ
ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை
யாட்கொண்ட ஆரூ
பாவியேன் அறியாதே பாழூரிற்
பயிக்கம்புக் கெய்த்த வாறே. 08

50 ஒட்டாத வாளவுணர் புரம்மூன்றும்
ஓரம்பின் வாயின்
கட்டானைக் காமனையுங் காலனையுங்
கண்ணினொடு காலின்
அட்டானை ஆரூரில் அம்மானை
ஆர்வச்செற் றக்கு
தட்டானைச் சாராதே தவமிருக்க
அவஞ்செய்து தருக்கி னேனே. 09

51 மறுத்தானோர் வல்லரக்கன் ஈரைந்து
முடியினொடு தோளுந்
இறுத்தானை எழில்முளரித் தவிசின்மிசை
இருத்தான்றன் தலையி
அறுத்தானை ஆரூரில் அம்மானை
ஆலாலம் உண்டு
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க
இரும்புகடித் தெய்த்த வாறே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.6 திருக்கழிப்பாலை

பண் -
திருச்சிற்றம்பலம்

52 வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
தானவனே என்கின்
சினபவளத் திண்டோள்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்றன் என்கின்
அனபவள மேகலையோ டப்பாலைக்
கப்பாலான் என்கின்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 01

53 வண்டுலவு கொன்றை வளர்புன்
சடையானே என்கின்
விண்டலர்ந்து நாறுவதோர் வெள்ளெருக்க
நாண்மலருண் டென்கின்
உண்டயலே தோன்றுவதோர் உத்தரியப்
பட்டுடையன் என்கின்
கண்டயலே தோன்றுங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 02

54 பிறந்திளைய திங்களெம் பெம்மான்
முடிமேல தென்கின்
நிறங்கிளருங் குங்குமத்தின் மேனி
யவன்நிறமே யென்கின்
மறங்கிளர்வேற் கண்ணாள் மணிசேர்
மிடற்றவனே யென்கின்
கறங்கோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 03

55 இரும்பார்ந்த சூலத்தன் ஏந்தியோர்
வெண்மழுவன் என்கின்
சுரும்பார்ந்த மலர்க்கொன்றைச் சுண்ணவெண்
ணீற்றவனே என்கின்
பெரும்பால னாகியோர் பிஞ்ஞுக
வேடத்தன் என்கின்
கரும்பானல் பூக்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 04

56 பழியிலான் புகழுடையன் பால்நீற்றான்
ஆனேற்றன் என்கின்
விழியுலாம் பெருந்தடங்கண் இரண்டல்ல
மூன்றுளவே என்கின்
சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே என்கின்
கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 05

57 பண்ணார்ந்த வீணை பயின்ற
விரலவனே என்கின்
எண்ணார் புரமெரித்த எந்தை
பெருமானே என்கின்
பண்ணார் முழவதிரப் பாடலோ
டாடலனே என்கின்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 06

58 முதிருஞ் சடைமுடிமேல் முழ்கும்
இளநாகம் என்கின்
அதுகண் டதனருகே தோன்றும்
இளமதியம் என்கின்
சதுர்வெண் பளிக்குக் குழைகாதின்
மின்னிடுமே என்கின்
கதிர்முத்தஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 07

59 ஓரோத மோதி உலகம்
பலிதிரிவான் என்கின்
நீரோத மேற நிமிர்புன்
சடையானே என்கின்
பாரோத மேனிப் பவளம்
அவனிறமே என்கின்
காரோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 08

60 வானுலாந் திங்கள் வளர்புன்
சடையானே என்கின்
ஊனுலாம் வெண்டலைகொண் டூரூர்
பலிதிரிவான் என்கின்
தேனுலாங் கோதை திளைக்குந்
திருமார்பன் என்கின்
கானுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 09

61 அடர்ப்பரிய இராவணனை அருவரைக்கீழ்
அடர்த்தவனே என்கின்
சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே என்கின்
மடற்பெரிய ஆலின்கீழ் அறம்நால்வர்க்
கன்றுரைத்தான் என்கின்
கடற்கருவி சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.7 திருஏகம்பம்

பண் -
திருச்சிற்றம்பலம்

62 கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக்
விரவாடும் பெருமானை விடையேறும்
அரவாடச் சடைதாழ அங்கையினில்
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 01

63 தேனோக்குங் கிளிமழலை உமைகேள்வன்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ்
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை

ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 02

64 கைப்போது மலர்தூவிக் காதலித்து
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற
அப்போது மலர்தூவி ஐம்புலனும்
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே. 03

65 அண்டமாய் ஆதியாய் அருமறையோ
பிண்டமாய் உலகுக்கோர் பெய்பொருளாம்
தொண்டர்தாம் மலர்தூவிச் சொன்மாலை
இண்டைசேர் சடையானை என்மனத்தே வைத்தேனே. 04

66 ஆறேறு சடையானை ஆயிரம்பே
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும்
நீறேறு திருமேனி நின்மலனை
ஏறேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 05

67 தேசனைத் தேசங்கள் தொழநின்ற
பூசனைப் பூசனைகள் உகப்பானைப்
வாசனை மலைநிலநீர் தீவளிஆ
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே. 06

68 நல்லானை நல்லான நான்மறையோ
வல்லானை வல்லார்கள் மனத்துறையும்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே. 07

69 விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேல்
எரித்தானை எம்மானை என்மனத்தே வைத்தேனே. 08

70 ஆகம்பத் தரவணையான் அயன்அறிதற்
பாகம்பெண் ணாண்பாக மாய்நின்ற
மாகம்ப மறையோதும் இறையானை
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே. 09

71 அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக்
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே. 10

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்
*******************************

## 4.8 சிவனெனுமோசை

பண் -
திருச்சிற்றம்பலம்

72 சிவனெனு மோசையல்ல தறையோ வுலகிற்
றிருநின்ற செம்மை
அவனுமோ ரையமுண்ணி யதளாடை யாவ
ததன்மேலொ ராட

கவணள வுள்ளஉண்கு கரிகாடு கோயில்
 கலனாவ தோடு
அவனது பெற்றிகண்டு மவனீர்மை கண்டு
 மகநேர்வர் தேவ ரவரே. 01

73 விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத
 விதியல்லர் விண்ணு
திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர்
 தெளிநீரு மல்லர்
அரிதரு கண்ணியாளை ஒருபாக மாக
 அருள்கார ணத்தில்
எரியர வாரமார்பர் இமையாரு மல்லர்
 இமைப்பாரு மல்லர் இவரே. 02

74 தேய்பொடி வெள்ளைபூசி யதன்மேலோர் திங்கள்
 திலகம் பதித்த
காய்கதிர் வேலைநீல ஒளிமா மிடற்றர்
 கரிகாடர் காலோர்
வேயுட னாடுதோளி அவள்விம்ம வெய்ய
 மழுவீசி வேழவுரி
தேயிவ ராடுமாறும் இவள்காணு மாறும்
 இதுதா னிவர்க்கோ ரியல்பே. 03

75 வளர்பொறி யாமைபுல்கி வளர்கோதை வைகி
 வடிதோலும் நூலும்
கிளர்பொறி நாகமொன்று மிளிர்கின்ற மார்பர்
 கிளர்காடு நாடு
நளிர்பொறி மஞ்ஞையன்ன தளிர்போன்ற சாய
 லவள்தோன்று வாய்மை
குளிர்பொறி வண்டுபாடு குழலா லொருத்தி
 யுளள்போல் குலாவி யுடனே. 04

76 உறைவது காடுபோலு முரிதோ லுடுப்பர்
 விடையூர்வ தோடு
இறையிவர் வாழும்வண்ண மிதுவேலு மீச
 ரொருபா லிசைந்த
பிறைநுதல் பேதைமாதர் உமையென்னு நங்கை
 பிறழ்பாட நின்று
அறைகழல் வண்டுபாடும் அடிநீழ லாணை
 கடவா தமர ருலகே. 05

77 கணிவளர் வேங்கையோடு கடிதிங்கள் கண்ணி
 கழல்கால் சிலம்ப
அணிகிள ராரவெள்ளை தவழ்சுண்ண வண்ண
 மியலா ரொருவ
மணிகிளர் மஞ்ஞையால மழையாடு சோலை
 மலையான் மகட்கு
அணிகிள ரன்னவண்ணம் அவள் வண்ணவண்ணம்
 அவர்வண்ண வண்ணம் அழலே. 06

78 நகைவலர் கொன்றைதுன்று நகுவெண் டலையர்
 நளிர்கங்கை தங்கு
மிகைவளர் வேதகீத முறையோடும் வல்ல
 கறைகொள் மணிசெய்
முகைவளர் கோதைமாதர் முனிபாடு மாறு
 மெரியாடு மாறு
பகைவளர் நாகம்வீசி மதியங்கு மாறு
 மிதுபோலும் ஈச ரியல்பே. 07

79 ஒளிவளர் கங்கைதங்கு மொளிமா லயன்ற
னுடல்வெந்து வீய
றணிகிள ராரவெள்ளை தவழ்சுண்ண வண்ணர்
தமியா ரொருவ
களிகிளர் வேடமுண்டோர் கடமா வுரித்த
உடைதோல் தொடுத்த
அணிகிள ரன்னதொல்லை யவள்பாக மாக
எழில்வேத மோது மவரே. 08

80 மலைமட மங்கையோடும் வடகங்கை நங்கை
மணவாள ராகி
தலைகல னாகவுண்டு தனியே திரிந்து
தவவாண ராகி
விலையிலி சாந்தமென்று வெறிநீறு பூசி
விளையாடும் வேட
அலைகடல் வெள்ளமுற்று மலறக் கடைந்த
அழல்நஞ்ச முண்ட வவரே. 09

81 புதுவிரி பொன்செயோலை யொருகாதோர் காது
சுரிசங்க நின்று
விதிவிதி வேதகீத மொருபாடு மோத
மொருபாடு மெல்ல
மதுவிரி கொன்றைதுன்று சடைபாக மாதர்
குழல்பாக மாக
இதுஇவர் வண்ணவண்ணம் இவள்வண்ண வண்ணம்
எழில்வண்ண வண்ண மியல்பே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.9 திருஅங்கமாலை

பண் -
திருச்சிற்றம்பலம்

82 தலையே நீவணங்காய் -
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந்
தலையே நீவணங்காய். 01

83 கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட
எண்டோள் வீசிநின் றாடும்
கண்காள் காண்மின்களோ. 02

84 செவிகாள் கேண்மின்களோ -
எம்மிறை
எரிபோல் மேனிப்பி ரான்றிறம் எப்போதுஞ்
செவிகள் கேண்மின்களோ. 03

85 மூக்கே நீமுரலாய் - முது
காடுறை
வாக்கே நோக்கிய மங்கை
மூக்கே நீமுரலாய். 04

86 வாயே வாழ்த்துகண்டாய் -
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்
வாயே வாழ்த்துகண்டாய். 05

87 நெஞ்சே நீநினையாய் - நிமிர்
புன்சடை
மஞ்சா டும்மலை மங்கை
நெஞ்சே நீநினையாய். 06

88 கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர்
பைவாய்ப் பாம்பரை யார்த்த
கைகள் கூப்பித்தொழீர். 07

89 ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாதவிவ்
வாக்கை யாற்பயனென். 08

90 கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 09

91 உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல்
குற்றார் ஆருளரோ. 10

92 இறுமாந் திருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத்
சிறுமா னேந்திதன் சேவடிக்
கிறுமாந் திருப்பன்கொலோ. 11

93 தேடிக் கண்டுகொண்டேன் -
மாலொடு
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.10 திருக்கெடிலவாணர்

பண் -
திருச்சிற்றம்பலம்

94 முளைக்கதிர் இளம்பிறை மூழ்க
வளைத்தெழு சடையினர் மழலை
திளைத்ததோர் மான்மழுக் கையர்
கிளைத்துழித் தோன்றிடுங் கெடில வாணரே. 01

95 ஏறினர் ஏறினை ஏழை
கூறினர் கூறினர் வேதம்
ஆறினர் ஆறிடு சடையர்
கீறின வுடையினர் கெடில வாணரே. 02

96 விடந்திகழ் கெழுதரு மிடற்றர்
றுடம்பழ கெழுதுவர் முழுதும்
படந்தழ கெழுதரு சடையிற்
கிடந்தழ கெழுதிய கெடில வாணரே. 03

97 விழுமணி அயிலெயிற் றம்பு
கொழுமணி நெடுவரை கொளுவிக்
செழுமணி மிடற்றினர் செய்யர்
கெழுமணி அரவினர் கெடில வாணரே. 04

98 குழுவினர் தொழுதெழும் அடியர்
தழுவின கழுவுவர் பவள
மழுவினர் மான்மறிக் கையர்
கெழுவின யோகினர் கெடில வாணரே. 05

99 அங்கையில் அனலெரி யேந்தி
மங்கையைச் சடையிடை மணப்பர்
நங்கையைப் பாகமு நயப்பர்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே. 06

100 கழிந்தவர் தலைகல னேந்திக்
திழிந்தவ ரொருவரென் றெள்க
வழிந்திழி மதுகர மிழற்ற
கிழிந்ததேன் நுகர்தருங் கெடில வாணரே. 07

101 கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும்
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே. 08

102 வெறியுறு விரிசடை புரள
பொறியுறு புலியுரி யரைய
நெறியுறு குழலுமை பாக
கிறிபட உழிதர்வர் கெடில வாணரே. 09

103 பூண்டதோர் அரக்கனைப் பொருவில்
தூண்டுதோ ளவைபட அடர்த்த
ஈண்டுநீர்க் கமலவாய் மேதி
கீண்டுதேன் சொரிதருங் கெடில வாணரே. 10

திருச்சிற்றம்பலம்
******************************

## 4.11 நமச்சிவாயப்பதிகம்

பண் -
திருச்சிற்றம்பலம்

104 சொற்றுணை வேதியன் சோதி
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 01

105 பூவினுக் கருங்கலம் பொங்கு
ஆவினனுக் கருங்கலம் அரனஞ்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 02

106 விண்ணுற அடுக்கிய விறகின்
உண்ணிய புகிலவை யொன்று
பண்ணிய வுலகினிற் பயின்ற
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 03

107 இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி
விடுக்கிற் பிரானென்று வினவுவோ
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின்
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 04

108 வெந்தநீ றருங்கலம் விரதி
அந்தணர்க் கருங்கலம் அருமறை
திங்களுக் கருங்கலந் திகழு
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. 05

109 சலமிலன் சங்கரன் சார்ந்த
நலமிலன் நாடொறு நல்கு
குலமில ராகிலுங் குலத்திற்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 06

110 வீடினார் உலகினில் விழுமிய
கூடினார் அந்நெறி கூடிச்
ஓடினே னோடிச்சென் றுருவங்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே. 07

111 இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 08

112 முன்னெறி யாகிய முதல்வன்
தன்னெறி யேசர ணாதல்
அந்நெறி யேசென்றங் கடைந்த
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 09

113 மாப்பிணை தழுவிய மாதோர்
பூப்பிணை திருந்தடி பொருந்தக்
நாப்பிணை தழுவிய நமச்சி
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 10

இது சமணர்கள் கற்றூணிற்கட்டிக்
வீழ்த்தினபோது ஓதியருளியது.

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.12 திருப்பழனம்

பண் -
திருச்சிற்றம்பலம்

114 சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ. 01

115 கண்டகங்காள் முண்டகங்காள் கைதைகாள்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப்
வண்டுலாந் தடமூழ்கி மற்றவனென்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளா தொழிவானோ. 02

116 *மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ
பனைக்கைமா வுரிபோர்த்தான் பலர்பாடும்
நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ
சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச் சோர்வாளோ. 03

* மனைக்காஞ்சியென்பது வீட்டுக்குச்
சமீபத்திலிருக்குங்

117 புதியையாய் இனியையாம் பூந்தென்றால்
பதியாவ திதுவென்று பலர்பாடும்
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட
விதியாளன் என்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானோ. 04

118 மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர்
கண்பொருந்தும் போழ்தத்துங் கைவிடநான் கடவேனோ. 05

119 பொங்கோத மால்கடலிற் புறம்புறம்போய்
செங்கால்வெண் மடநாராய் செயற்படுவ
அங்கோல வளைகவர்ந்தான் அணிபொழில்சூழ்
தங்கோல நறுங்கொன்றைத் தாரருளா தொழிவானோ. 06

120 துணையார முயங்கிப்போய்த் துறைசேரும்
பணையார வாரத்தான் பாட்டோவாப்
கணையார இருவிசும்பிற் கடியரணம்
இணையார மார்பன்என் எழில்நலமுண் டிகழ்வானோ. 07

121 *கூவைவாய் மணிவரன்றிக் கொழித்தோடுங்
பாவைவாய் முத்திலங்கப் பாய்ந்தாடும்
கோவைவாய் மலைமகள்கோன் கொல்லேற்றின்
பூவைகாள் மழலைகாள் போகாத பொழுதுளதே. 08

*கூவைவாய்மணி என்பது பூமியினிடத்தில்
பொருந்திய முத்துக்கள் - அவையாவன -
யானைக்கொம்பு, பன்றிக்கொம்பு, நாகம், பசுவின்பல்,
மூங்கிற்கணு, கொக்கின்கழுத்து, கற்புள்ள
மாதர்கண்டம் என்னுமிவ்விடங்களி லுண்டாயிருக்கு
முத்துக்களாம்.
** காவிரிப்பூம்பாவைவாய் முத்து என்பது நீர்முத்து
எனக்கொள்க. அவை - சங்கு, இப்பி, மீன், தாமரைமலர்
என்னு மிவைகளி லுண்டாகு முத்துக்கள். இதனை
"சிறைகொள் நீர்த்தரளத் திரல்கொணித்திலத்த" எனத்
திருமாளிகைத்தேவர் அருளிச்செய்த திருவிசைப்பா,
2-வது பதிகம் 5-வது

122 புள்ளிமான் பொறியரவம் புள்ளுயர்த்தான்
பள்ளியான் தொழுதேத்த இருக்கின்ற
உள்ளுவார் வினைதீர்க்கும் என்றுரைப்பர்
கள்ளியேன் நான்இவற்கென் கனவளையுங் கடவேனோ. 09

123 வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும்

அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும்
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.13 திருவையாறு

பண் -
திருச்சிற்றம்பலம்

124 விடகிலேன் அடிநாயேன் வேண்டியக்கால்
இடைகிலேன் அமணர்கள்தம் அறவுறைகேட்
தொடர்கின்றேன் உன்னுடைய தூமலர்ச்சே
அடைகின்றேன் ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 01

125 செம்பவளத் திருவுருவர் திகழ்சோதி
கொம்பமருங் கொடிமருங்கிற் கோல்வளையா
வம்பவிழும் மலர்க்கொன்றை வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவள ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 02

126 நணியானே சேயானே நம்பானே
துணியானே தோலானே சுண்ணவெண்
மணியானே வானவர்க்கு மருந்தாகிப்
அணியானே ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 03

127 ஊழித்தீ யாய்நின்றாய் உள்குவார்
வாழித்தீ யாய்நின்றாய் வாழ்த்துவார்
பாழித்தீ யாய்நின்றாய் படர்சடைமேற்
ஆழித்தீ ஐயாறார்க் காளாய்நான் உய்ந்தேனே. 04

128 சடையானே சடையிடையே தவழுந்தண்
விடையானே விடையேறிப் புரமெரித்த
உடையானே உடைதலைகொண் டூரூருண்
அடையானே ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 05

129 நீரானே தீயானே நெதியானே
ஊரானே உலகானே உடலானே
பேரானே பிறைசூட பிணிதீர்க்கும்
றாராத ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 06

130 கண்ணானாய் மணியானாய் கருத்தானாய்
எண்ணானாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோர்
விண்ணானாய் விண்ணிடையே புரமெரித்த
அண்ணான ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 07

* அருத்தனாயென்பதற்கு - உண்ணப்படும்
எனப் பொருள்படுகின்றது.

131 மின்னானாய் உருமானாய் வேதத்தின்
பொன்னானாய் மணியானாய் பொருகடல்வாய்
நின்னானார் இருவர்க்குங் காண்பரிய
அன்னானே ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 08

132 முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளங் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும்
எத்திசையும் வானவர்கள் எம்பெருமா
அத்திசையாம் ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 09

133 கருவரைசூழ் கடலிலங்கைக் கோமானைக்
திருவிரலால் உதகரணஞ் செய்துகந்த
பெருவரைசூழ் வையகத்தார் பேர்நந்தி என்றேத்தும்
அருவரைசூழ் ஐயாறர்க் காளாய்நான் உய்ந்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.14 தசபுராணம்

பண் -
திருச்சிற்றம்பலம்

134 பருவரை யொன்றுசுற்றி அரவங்கை விட்ட
இமையோர் இரிந்து
திருநெடு மால்நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுந்த
பெருகிட மற்றிதற்கொர் பிதிகார மொன்றை
அருளாய் பிரானே
அருள்கொடு மாவிடத்தை எரியாமல் உண்ட
அவனண்டர் அண்ட ரரசே. 01

135 நிரவொலி வெள்ளமண்டி நெடுவண்ட மூட
நிலநின்று தம்ப மதுவப்
பரமொரு தெய்வமெய்த இதுவொப்ப தில்லை
யிருபாலு நின்று
பிரமனு மாலுமேலை முடியோடு பாதம்
அறியாமை நின்ற
பரமுத லாயதேவர் சிவனாய மூர்த்தி
யவனா நமக்கோர் சரணே. 02

136 காலமு நாள்கள்ஊழி படையா முன்ஏக
உருவாகி மூவர்
சாலவு மாகிமிக்க சமயங்க ளாறின்
உருவாகி நின்ற
ஞாலமு மேலைவிண்ணோ டுலகேழு முண்டு
குறளாயோ ராலின்
பாலனு மாயவற்கோர் பரமாய மூர்த்தி
யவனா நமக்கோர் சரணே. 03

137 நீடுயர் மண்ணுவிண்ணும் நெடுவேலை குன்றொ
டுலகேழு மெங்கு
சூடிய கையராகி இமையோர் கணங்கள்
துதியோதி நின்று
ஓடிய தாருகன்றன் உடலம் பிளந்து
ஒழியாத கோபம்
ஆடிய மாநடத்தெ மனலாடி பாதம்
அவையா நமக்கோர் சரணே. 04

138 நிலைவலி இன்றியெங்கும் நிலனோடு விண்ணும்
நிதனஞ்செய் தோடு

றலைநலி வஞ்சியோடி அரியோடு தேவர்
அரணம் புகத்தன்
கொலைநலி வாளிமூள அரவங்கை நாணும்
அனல்பாய நீறு
மலைசிலை கையிலொல்க வளைவித்த வள்ள
லவனா நமக்கோர் சரணே. 05

139 நீலநன் மேனிசெங்கண் வளைவெள் ளெயிற்ற
னெரிகேசன் நேடி
காலைநன் மாலைகொண்டு வழிபாடு செய்யும்
அளவின்கண் வந்து
பாலனை ஓடவோடப் பயமெய்து வித்த
உயிர்வவ்வு பாசம்
காலனை வீடுசெய்த கழல்போலும் அண்டர்
தொழுதோது சூடு கழலே. 06

140 உயர்தவ மிக்கதக்கன் உயர்வேள்வி தன்னில்
அவியுண்ண வந்த
பயமுறு மெச்சனங்கி மதியோனு முற்ற
படிகண்டு நின்று
அயனொடு மாலுமெங்க ளறியாமை யாதி
கமியென் றிறைஞ்சி
சயமுறு தன்மைகண்ட தழல்வண்ணன் எந்தை
கழல்கண்டு கொள்கை சரணே. 07

141 நலமலி மங்கைநங்கை விளையாடி யோடி
நயனத் தலங்கள்
உலகினை ஏழுமுற்றும் இருள்மூட மூட
இருளோட நெற்றி
அலர்தர அஞ்சிமற்றை நயனங்கை விட்டு
மடவாள் இறைஞ்ச
அலர்தரு சோதிபோல அலர்வித்த முக்கண்
அவனா நமக்கோர் சரணே. 08

142 கழைபடு காடுதென்றல் குயில்கூவ அஞ்சு
கணையோன் அணைந்து
மழைவடி வண்ணன்எண்ணி மகவோனை விட்ட
மலரான தொட்ட
எழில்பொடி வெந்துவீழ இமையோர் கணங்கள்
எரியென் றிறைஞ்சி
தழல்படு நெற்றிஒற்றை நயனஞ் சிவந்த
தழல்வண்ணன் எந்தை சரணே. 09

143 தடமலர் ஆயிரங்கள் குறைவொன்ற தாக
நிறைவென்று தன்க
உடன்வழி பாடுசெய்த திருமாலை யெந்தை
பெருமான் உகந்து
சுடரடி யான்முயன்று சுழல்வித் தரக்கன்
இதயம் பிளந்த
அடல்வலி ஆழியாழி யவனுக் களித்த
அவனா நமக்கோர் சரணே. 10

144 கடுகிய தேர்செலாது கயிலாய மீது
கருதேலுன் வீரம்
முடுகுவ தன்றுதன்ம மெனநின்று பாகன்
மொழிவானை நன்று
விடுவிடு வென்றுசென்று விரைவுற் றரக்கன்
வரையுற் றெடுக்க

நெடுநெடு இற்றுவீழ விரலுற்ற பாதம்
நினைவுற்ற தென்றன் மனனே. 11

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.15 பாவநாசத்திருப்பதிகம்

பண் -
திருச்சிற்றம்பலம்

145 பற்றற் றார்சேற் பழம்பதியைப்
பாசூர் நிலாய
சிற்றம் பலத்தெந் திகழ்கனியைத்
தீண்டற் கரிய
*வெற்றி யூரில் விரிசுடரை
விமலர் கோனைத்
ஒற்றி யூரெம் உத்தமனை
உள்ளத் துள்ளே வைத்தேனே. 01

* வெற்றியூரென்பது

146 ஆனைக் காவில் அணங்கினை
ஆரூர் நிலாய
கானப் பேரூர்க் கட்டியைக்
கானூர் முளைத்த
வானப் பேரார் வந்தேத்தும்
வாய்மூர் வாழும்
மானக் கயிலை மழகளிற்றை
மதியைச் சுடரை மறவேனே. 02

147 மதியங் கண்ணி ஞாயிற்றை
மயக்கந் தீர்க்கும்
அதிகை மூதூர் அரசினை
ஐயா றமர்ந்த
விதியைப் புகழை வானோர்கள்
வேண்டித் தேடும்
நெதியை ஞானக் கொழுந்தினை
நினைந்தேற் குள்ளம் நிறைந்ததே. 03

148 புறம்ப யத்தெம் முத்தினைப்
புகலூர் இலங்கு
*உறந்தை யோங்கு சிராப்பள்ளி
உலகம் விளக்கு
கறங்கு மருவிக் கழுக்குன்றிற்
காண்பார் காணுங்
அறஞ்சூழ் அதிகை வீரட்டத்
தரிமான் ஏற்றை அடைந்தேனே. 04

* உறந்தையென்பது

149 கோலக் காவிற் குருமணியைக்
*குடமூக் குறையும்
ஆலங் காட்டி லந்தேனை
அமரர் சென்னி
பாலிற் றிகழும் பைங்கனியைப்
பராய்த் துறையெம்

சூலத் தானைத் துணையிலியைத்
தோளைக் குளிரத் தொழுதேனே. 05

*குடமூக்கென்பது

150 மருக லுறையுமா ணிக்கத்தை
வலஞ் சுழியின்
கருகா வூரிற் கற்பகத்தைக்
காண்டற் கரிய
பெருவே ளூரெம் பிறப்பிலியைப்
பேணு வார்கள்
திருவாஞ் சியத்தெஞ் செல்வனைச்
சிந்தை யுள்ளே வைத்தேனே. 06

151 எழிலார் இராச சிங்கத்தை
இராமேச் சுரத்தெம்
குழலார் கோதை வரைமார்பிற்
குற்றா லத்தெங்
நிழலார் சோலை நெடுங்களத்து
நிலாய நித்த
அழலார் வண்ணத் தம்மானை
அன்பி லணைத்து வைத்தேனே. 07

152 மாலைத் தோன்றும் வளர்மதியை
மறைக்காட் டுறையும்
ஆலைக் கரும்பி னின்சாற்றை
அண்ணா மலையெம்
சோலைத் துருத்தி நகர்மேய
சுடரிற் றிகழுந்
மேலை வானோர் பெருமானை
விருப்பால் விழுங்கி யிட்டேனே. 08

153 சோற்றுத் துறையெஞ் சோதியைத்
துருத்தி மேய
ஆற்றிற் பழனத் தம்மானை
ஆல வாயெம்
நீற்றிற் பொலிந்த நிமிர்திண்டோள்
நெய்த்தா னத்தெந்
தோற்றக் கடலை அடலேற்றைத்
தோளைக் குளிரத் தொழுதேனே. 09

154 புத்தூ ருறையும் புனிதனைப்
பூவ ணத்தெம்
வித்தாய் மிழலை முளைத்தானை
வேள்விக் குடியெம்
பொய்த்தார் புரமூன் றெரித்தானைப்
பொதியில் மேய
வைத்தேன் என்றன் மனத்துள்ளே
*மாத்தூர் மேய மருந்தையே. 10

* மாத்தூரென்பது -

155 முந்தித் தானே முளைத்தானை
மூரி வெள்ளே
அந்திச் செவ்வான் படியானை
அரக்க னாற்றல்
சிந்தை வெள்ளப் புனலாட்டிச்
செஞ்சொன் மாலை

எந்தை பெம்மான் என்னெம்மான்
என்பார் பாவ நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.16 திருப்புகலூர்

பண் -
திருச்சிற்றம்பலம்

156 செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளுங்
கையர் கனைகழல் கட்டிய
மெய்யர் மெய்ந்நின் றவர்க்கல்லா
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே. 01

157 மேகநல் ஊர்தியர் மின்போல்
பாக மதிநுத லாளையோர்
நாக வளையினர் நாக
போகர் புகலூர்ப் புரிசடை யாரே. 02

158 பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை
கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத்
பொருந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 03

159 அக்கார் அணிவடம் ஆகத்தர்
நக்கார் இளமதிக் கண்ணியர்
உக்கார் தலைபிடித் துன்பலிக்
புக்கார் புகலூர்ப் புரிசடை யாரே. 04

160 ஆர்த்தார் உயிரடும் அந்தகன்
பேர்த்தார் பிறைநுதற் பெண்ணின்நல்
கூர்த்தார் மருப்பிற் கொலைக்களிற் றீருரி
போர்த்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 05

161 தூமன் சுறவந் துதைந்த
காமன் கணைவலங் காய்ந்தமுக்
சேம நெறியினர் சீரை
பூமன் புகலூர்ப் புரிசடை யாரே. 06

162 உதைத்தார் மறலி உருளவோர்
சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல்
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 07

163 கரிந்தார் தலையர் கடிமதில்
தெரிந்தார் கணைகள் செழுந்தழ
விரிந்தார் சடைமேல் விரிபுனற்
புரிந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 08

164 ஈண்டார் அழலி னிருவருங்
நீண்டார் நெடுந்தடு மாற்ற
மாண்டார்தம் என்பு மலர்க்கொன்றை
பூண்டார் புகலூர்ப் புரிசடை யாரே. 09

165 கறுத்தார் மணிகண்டங் கால்விர
இறுத்தார் இலங்கையர் கோன்முடி பத்தும்
அறுத்தார் புலனைந்தும் ஆயிழை
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.17 திருவாரூர் - அரநெறி

பண் -
திருச்சிற்றம்பலம்

166 எத்தீ புகினும் எமக்கொரு
தெத்தே யெனமுரன் றெம்முள்
முத்தீ யனையதோர் மூவிலை
தத்தீ நிறத்தார் அரநெறி யாரே. 01

167 வீரமும் பூண்பர் விசயனொ
தாரமும் பூண்பர் தமக்கன்பு
பாரமும் பூண்பர்நற் பைங்கண்
வாரமும் பூண்பர் அரநெறி யாரே. 02

168 தஞ்சவண் ணத்தர் சடையினர்
வஞ்சவண் ணத்தர்வண் டார்குழ
துஞ்சவண் ணத்தர்துஞ் சாதகண்
அஞ்சவண் ணத்தர் அரநெறி யாரே. 03

169 விழித்தனர் காமனை வீழ்தர
றிழித்தனர் கங்கையை யேத்தினர்
கழித்தனர் கல்சூழ் கடியரண்
அழித்தனர் ஆரூர் அரநெறி யாரே. 04

170 துற்றவர் வெண்டலை யிற்சுருள்
தற்றவர் தம்வினை யானவெல்
அற்றவர் ஆரூர் அறநெறி
உற்றவர் தாமொளி பெற்றனர் தாமே. 05

171 கூடர வத்தர் குரற்கிண்
நீடர வத்தர்முன் மாலை
பாடர வத்தர் பணமஞ்சு
தாடர வத்தர் அரநெறி யாரே. 06

172 கூடவல் லார்குறிப் பில்லுமை
பாடவல் லார்பயின் றந்தியுஞ்
ஆடவல் லார்திரு வாரூர்
நாடவல் லார்வினை வீடவல் லாரே. 07

173 பாலை நகுபனி வெண்மதி
மாலையுங் கண்ணியு மாவன
காலையு மாலையுங் கைதொழு
ஆலயம் ஆரூர் அரநெறி யார்க்கே. 08

174 முடிவண்ணம் வானமின் வண்ணந்தம்
பொடிவண்ணந் தம்புக ழூர்தியின்
படிவண்ணம் பாற்கடல் வண்ணஞ்செஞ்
றடிவண்ணம் ஆரூர் அரநெறி யார்க்கே. 09

175 பொன்னவில் புன்சடை யானடி
இன்னருள் சூடியெள் காதுமி
மன்னவர் கின்னரர் வானவர்
அன்னவர் ஆரூர் அரநெறி யாரே. 10

176 பொருள்மன் னனைப்பற்றிப் புட்பகங்
மருள்மன் னனையெற்றி வாளுட னீந்து
கருள்மன் னுகண்டங் கறுக்க
அருள்மன்னர் ஆரூர் அரநெறி யாரே. 11

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.18 விடந்தீர்த்ததிருப்பதிகம்

பண் -
திருச்சிற்றம்பலம்

177 ஒன்றுகொ லாமவர் சிந்தை
ஒன்றுகொ லாமுய ரும்மதி
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே. 01

178 இரண்டுகொ லாமிமை யோர்தொழு
இரண்டுகொ லாமிலங் குங்குழை
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு
இரண்டுகொ லாமவர் எய்தின தாமே. 02

179 மூன்றுகொ லாமவர் கண்ணுத
மூன்றுகொ லாமவர் சூலத்தின்
மூன்றுகொ லாங்கணை கையது
மூன்றுகொ லாம்புர மெய்தன தாமே. 03

180 நாலுகொ லாமவர் தம்முக
நாலுகொ லாஞ்சன னம்முதற்
நாலுகொ லாமவர் ஊர்தியின்
நாலுகொ லாமறை பாடின தாமே. 04

181 அஞ்சுகொ லாமவர் ஆடர
அஞ்சுகொ லாமவர் வெல்புல
அஞ்சுகொ லாமவர் காயப்பட்
அஞ்சுகொ லாமவர் ஆடின தாமே. 05

182 ஆறுகொ லாமவர் அங்கம்
ஆறுகொ லாமவர் தம்மக
ஆறுகொ லாமவர் தார்மிசை
ஆறுகொ லாஞ்சுவை யாக்கின தாமே. 06

183 ஏழுகொ லாமவர் ஊழி
ஏழுகொ லாமவர் கண்ட
ஏழுகொ லாமவர் ஆளு
ஏழுகொ லாமிசை யாக்கின தாமே. 07

184 எட்டுக்கொ லாமவர் ஈறில்
எட்டுக்கொ லாமவர் சூடு
எட்டுக்கொ லாமவர் தோளிணை
எட்டுக்கொ லாந்திசை யாக்கின தாமே 08

185 ஒன்பது போலவர் வாசல்
ஒன்பது போலவர் மார்பினில்
ஒன்பது போலவர் கோலக்
ஒன்பது போலவர் பாரிடந் தானே. 09

186 பத்துக்கொ லாமவர் பாம்பின்கண்
பத்துக்கொ லாமெயி றுந்நெரிந்
பத்துக்கொ லாமவர் காயப்பட்
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே 10

இது அப்பூதிநாயனார் புத்திரரைத்
நீங்கும்படி அருளிச்செய்தது.

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.19 திருவாரூர்

பண் -
திருச்சிற்றம்பலம்

187 சூலப் படையானைச் சூழாக
கோலத்தோட் குங்குமஞ்சேர் குன்றெட்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப்
ஆலத்தின் கீழானை நான்கண்ட தாரூரே. 01

188 பக்கமே பாரிடங்கள் சூழப்
புக்கவூர்ப் பிச்சையேற் றுண்டு
கொக்கிறகின் தூவல் கொடியெடுத்த
டக்கணிந்த அம்மானை நான்கண்ட தாரூரே. 02

189 சேய உலகமுஞ் செல்சார்வு
மாயப்போர் வல்லானை மாலைதாழ்
வேயொத்த தோளியர்தம் மென்முலைமேல்
ஆயத் திடையானை நான்கண்ட தாரூரே. 03

190 ஏறேற்ற மாவேறி எண்கணமும்
மாறேற்றார் வல்லரணஞ் சீறி
நீறேற்ற மேனியானாய் நீள்சடைமேல் நீர்ததும்ப
ஆறேற்ற அந்தணனை நான்கண்ட தாரூரே. 04

191 தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம்
பாங்கான வூர்க்கெல்லாஞ் செல்லும்
தேங்காவி நாறுந் திருவாரூர்த்
பூங்கோயி லுள்மகிழ்ந்து போகா திருந்தாரே. 05

192 எம்பட்டம் பட்ட முடையானை
நும்பட்டஞ் சேர்ந்த நுதலானை
செம்பட் டுடுத்துச் சிறுமா
அம்பட் டசைத்தானை நான்கண்ட தாரூரே. 06

193 போழொத்த வெண்மதியஞ் சூடிப்
வேழத் துரிபோர்த்தான் வெள்வளையாள்
ஊழித்தீ யன்னானை ஓங்கொலிமாப்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே. 07

194 வஞ்சனையா ரார்பாடுஞ் சாராத
துஞ்சிருளில் ஆடல் உகந்தானைத்
நெஞ்சிருள் கூரும் பொழுது
தஞ்சுடராய் நின்றானை நான்கண்ட தாரூரே. 08

195 காரமுது கொன்றை கடிநாறு
நீரமுது கோதையோ டாடிய
பேரமுத முண்டார்கள் உய்யப்
சாரமுதா வுண்டானை நான்கண்ட தாரூரே. 09

196 தாட வுடுக்கையன் தாமரைப்பூஞ்
கோடலா வேடத்தன் கொண்டதோர்
ஆடரவக் கிண்கிணிக்கால் அன்னானோர்
ஆடுந்தீக் கூத்தனை நான்கண்ட தாரூரே. 10

197 மஞ்சாடு குன்றடர வூன்றி
றுஞ்சாப்போர் வாளரக்கன் றோள்நெரியக்
செஞ்சாந் தணிவித்துத் தன்மார்பில்
றஞ்சாந் தணிந்தானை நான்கண்ட தாரூரே. 11

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.20 திருவாரூர்

பண் -
திருச்சிற்றம்பலம்

198 காண்டலேகருத் தாய்நினைந்திருந்
தேன்மனம்புகுந்
பூண்டுகொண் டொழிந்தேன்
புறம்போயி
ஈண்டுமாடங்கள் நீண்டமாளிகை
மேலெழுகொடி
தீண்டிவந் துலவுந்
திருவாரூ ரம்மானே. 01

199 கடம்படந்நட மாடினாய்களை
கண்ணெனக்கொரு
ஒடுங்கி வந்தடைந்
தேனொழிப்பாய்
முடங்கிறால்முது நீர்மலங்கிள
வாளைசெங்கயல்
றடைந்த தண்கழனி
அணியாரூ ரம்மானே. 02

200 அருமணித்தடம் பூண்முலை
அரம்பையரொ
உரிமையிற் றொழுவார்
உத்திர
விரிசடைவிர திகளந்தணர்
சைவர்பாசுப
தெருவினிற் பொலியுந்
திருவாரூ ரம்மானே. 03

201 பூங்கழல்தொழு தும்பரவியும்
புண்ணியாபுனி
ஈங்கிருக்கப் பெற்றேன்
என்னகுறை
ஓங்குதெங்கிலை யார்கமுகிள
வாழைமாவொடு மாதுளம்பல
தீங்கனி சிதறுந்
திருவாரூ ரம்மானே. 04

202 நீறுசேர்செழு மார்பினாய்நிரம்
பாமதியொடு
ஆறுபாய வைத்தாய்
அடியே
ஏறிவண்டொடு தும்பியஞ்சிற
கூன்றவிண்ட
தேறல்பாய்ந் தொழுகுந்
திருவாரூ ரம்மானே. 05

203 அளித்துவந்தடி கைதொழுமவர்
மேல்வினைகெடு
களித்துவந் துடனே
கலந்தாடக்
குளித்துமூழ்கியுந் தூவியுங்குடைந்
தாடுகோதையர்
தெளிக்குந் தீர்த்தமறாத்
திருவாரூ ரம்மானே. 06

204 திரியுமூவெயில் தீயெழச்சிலை
வாங்கிநின்றவ
பிரியுமா றெங்ஙனே
பிழைத்தேயும்
பெரியசெந்நெற் பிரம்புரிகெந்த
சாலிதிப்பிய
தரியுந் தண்கழனி
யணியாரூ ரம்மானே. 07

205 பிறத்தலும்பிறந் தாற்பிணிப்பட
வாய்ந்தசைந்துட லம்புகுந்துநின்
றிறக்குமா றுளதே
இழித்தேன்
அறத்தையேபுரிந் தமனத்தனாய்
ஆர்வச்செற்றக்கு
திறத்தனாய் ஒழிந்தேன்
திருவாரூ ரம்மானே. 08

206 முளைத்தவெண்பிறை மொய்சடையுடை
யாயெப்போதுமென்
வளைத்துக் கொண்டிருந்தேன்
வலிசெய்து

அளைப்பிரிந்த அலவன்போய்ப்புகு
தந்தகாலமுங்
திளைக்குந் தண்கழனித்
திருவாரூ ரம்மானே. 09

207 நாடினார்கம லம்மலரய
னோடிரணியன்
நாடிக் காணமாட்டாத்
தழலாய
பாடுவார்பணி வார்பல்லாண்டிசை
கூறுபத்தர்கள் சித்தத்துள்புக்குத்
தேடிக் கண்டுகொண்டேன்
திருவாரூ ரம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.21 திருவாரூர்திருவாதிரைத்திருப்பதிகம்

பண் -
திருச்சிற்றம்பலம்

208 முத்து விதான மணிப்பொற் கவரி
பத்தர்க ளோடு பாவையர் சூழப்
வித்தகக் கோல வெண்டலை மாலை
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 01

209 நணியார் சேயார் நல்லார் தீயார்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக்
மணியே பொன்னே மைந்தா மணாளா
கணியான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 02

210 வீதிகள் தோறும் வெண்கொடி யோடுவி தானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மா மணிகள்
சாதிக ளாய பவளமு முத்துத்
ஆதி ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 03

211 குணங்கள் பேசிக் கூடிப் பாடித்
பிணங்கித் தம்மிற் பித்தரைப் போலப்
வணங்கி நின்று வானவர் வந்து
அணங்கன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 04

212 நிலவெண் சங்கும் பறையும் ஆர்ப்ப
பலரு மிட்ட கல்ல வடங்கள்
கலவ மஞ்ஞை காரென் றெண்ணிக் களித்துவந்
தலம ராரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 05

213 விம்மா வெருவா விழியாத் தெழியா
தம்மாண் பிலராய்த் தரியார் தலையான்
எம்மான் ஈசன் எந்தை எனப்பன்
கம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 06

214 செந்துவர் வாயார் செல்வன் சேவடி
மைந்தர்க ளோடு மங்கையர் கூடிம
இந்திர னாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்
அந்திரன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 07

215 முடிகள் வணங்கி மூவா தார்கண்
வடிகொள் வேய்த்தோள் வான்அர மங்கையர்
பொடிகள் பூசிப் பாடுந் தொண்டர்
அடிகள் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 08

216 துன்பம் நும்மைத் தொழாத நாள்கள்
இன்பம் நும்மை யேத்து நாள்கள்
நும்பின் எம்மை நுழையப் பணியே
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம். 09

217 பாரூர் பௌவத் தானைப் பத்தர்
சீரூர் பாடல் ஆடல் அறாத
தோரூர் ஒழியா துலகம் எங்கும் எடுத்தேத்தும்
ஆரூ ரன்றன் ஆதிரை நாளால் அதுவண்ணம். 10

திருச்சிற்றம்பலம்

*****************************

## 4.22 கோயில் -

திருச்சிற்றம்பலம்

218 செஞ்சடைக் கற்றை முற்றத்
திளநிலா எறிக்குஞ்
நஞ்சடைக் கண்ட னாரைக்
காணலா நறவ
மஞ்சடைச் சோலைத் தில்லை
மல்குசிற் றம்ப
துஞ்சடை இருள் கிழியத்
துளங்கெரி யாடு மாறே. 01

219 ஏறனார் ஏறு தம்பால்
இளநிலா எறிக்குஞ்
ஆறனார் ஆறு சூடி
ஆயிழை யாளோர்
நாறுபூஞ் சோலைத் தில்லை
நவின்றசிற் றம்ப
நீறுமெய் பூசி நின்று
நீண்டெரி யாடு மாறே. 02

220 சடையனார் சாந்த நீற்றர்
தனிநிலா எறிக்குஞ்
உடையனா ருடைத லையில்
உண்பதும் பிச்சை
கடிகொள்பூந் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப
அடிகழ லார்க்க நின்று
வனலெரி யாடு மாறே. 03

221 பையர வசைத்த அல்குற்
பனிநிலா எறிக்குஞ்
மையரிக் கண்ணி யாளும்
மாலுமோர் பாக
செய்யெரி தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப
கையெரி வீசி நின்று
கனலெரி யாடு மாறே. 04

222 ஓதினார் வேதம் வாயால்
ஒளிநிலா எறிக்குஞ்
பூதனார் பூதஞ் சூழப்
புலியுரி யதள
நாதனார் தில்லை தன்னுள்
நவின்றசிற் றம்ப
காதில்வெண் குழைகள் தாழக்
கனலெரி யாடு மாறே. 05

223 ஓருடம் பிருவ ராகி
ஒளிநிலா எறிக்குஞ்
பாரிடம் பாணி செய்யப்
பயின்றஎம் பரம
காரிடந் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப
பேரிடம் பெருக நின்று
பிறங்கெரி யாடு மாறே. 06

224 முதற்றனிச் சடையை மூழ்க
முகிழ்நிலா எறிக்குஞ்
மதக்களிற் றுரிவை போர்த்த
மைந்தரைக் காண
மதத்துவண் டறையுஞ் சோலை
மல்குசிற் றம்ப
கதத்ததோ ரரவ மாடக்
கனலெரி யாடு மாறே. 07

225 மறையனார் மழுவொன் றேந்தி
மணிநிலா எறிக்குஞ்
இறைவனார் எம்பி ரானார்
ஏத்துவார் இடர்கள்
சிறைகொள்நீர்த் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப
அறைகழ லார்க்க நின்று
வனலெரி யாடு மாறே. 08

226 விருத்தனாய்ப் பால னாகி
விரிநிலா எறிக்குஞ்
நிருத்தனார் நிருத்தஞ் செய்ய
நீண்டபுன் சடைகள்
கருத்தனார் தில்லை தன்னுட்
கருதுசிற் றம்ப
அருத்தமா மேனி தன்னோ
டனலெரி யாடு மாறே. 09

227 பாலனாய் விருத்த னாகிப்
பனிநிலா எறிக்குஞ்
காலனைக் காலாற் காய்ந்த
கடவுளார் விடையொன்
ஞாலமாந் தில்லை தன்னுள்
நவின்றசிற் றம்ப
நீலஞ்சேர் கண்ட னார்தாம்
நீண்டெரி யாடு மாறே. 10

228 மதியிலா அரக்க னோடி
மாமலை யெடுக்க
நெதியன்றோள் நெரிய வூன்றி

நீடிரும் பொழில்கள்
மதியந்தோய் தில்லை தன்னுள்
மல்குசிற் றம்ப
அதிசயம் போல நின்று
வனலெரி யாடு மாறே. 11

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மூலத்தானநாயகர்,
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.23 கோயில் - திருநேரிசை

பண் -
திருச்சிற்றம்பலம்

229 பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனே பரம
எத்தினாற் பத்தி செய்கேன்
என்னைநீ இகழ
முத்தனே முதல்வா தில்லை
அம்பலத் தாடு
அத்தாவுன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்த வாறே. 01

230 கருத்தனாய்ப் பாட மாட்டேன்
காம்பன தோளி
ஒருத்தரா லறிய வொண்ணாத்
திருவுரு வுடைய
திருத்தமாந் தில்லை தன்னுட்
டிகழ்ந்தசிற் றம்ப
நிருத்தம்நான் காண வேண்டி
நேர்பட வந்த வாறே. 02

231 கேட்டிலேன் கிளைபி ரியேன்
கேட்குமா கேட்டி
நாட்டினேன் நின்றன் பாதம்
நடுப்பட நெஞ்சி
மாட்டினீர் வாளை பாயு
மல்குசிற் றம்ப
கூட்டமாங் குவிமு லையாள்
கூடநீ யாடு மாறே. 03

232 சிந்தையைத் திகைப்பி யாதே
செறிவுடை அடிமை
எந்தைநீ அருளிச் செய்யாய்
யாதுநான் செய்வ
செந்தியார் வேள்வி ஓவாத்
தில்லைச்சிற் றம்ப
அந்தியும் பகலும் ஆட
அடியிணை அலசுங் கொல்லோ. 04

233 கண்டவா திரிந்து நாளுங்
கருத்தினால் நின்றன்
கொண்டிருந் தாடிப் பாடிக்

கூடுவன் குறிப்பி
வண்டுபண் பாடுஞ் சோலை
மல்குசிற் றம்ப
எண்டிசை யோரு மேத்த
இறைவநீ யாடு மாறே. 05

234 பார்த்திருந் தடிய னேன்நான்
பரவுவன் பாடி
மூர்த்தியே என்பன் உன்னை
மூவரில் முதல்வன்
ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய்
தில்லைச்சிற் றம்ப லத்துக்
கூத்தாவுன் கூத்துக் காண்பான்
கூடநான் வந்த வாறே. 06

235 பொய்யினைத் தவிர விட்டுப்
புறமலா அடிமை
ஐயநீ அருளிச் செய்யாய்
ஆதியே ஆதி
வையகந் தன்னில் மிக்க
மல்குசிற் றம்ப
பையநின் னாடல் காண்பான்
பரமநான் வந்த வாறே. 07

236 மனத்தினார் திகைத்து நாளும்
மாண்பலா நெறிகள்
கனைப்பரால் என்செய் கேனோ
கறையணி கண்டத்
தினைத்தனை வேதங் குன்றாத்
தில்லைச்சிற் றம்ப
அனைத்துநின் னிலயங் காண்பான்
அடியனேன் வந்த வாறே. 08

237 நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பி
வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவ
மஞ்சடை சோலைத் தில்லை
மல்குசிற் றம்ப
அஞ்சொலாள் காண நின்று
அழகநீ யாடு மாறே. 09

238 மண்ணுண்ட மால வனும்
மலர்மிசை மன்னி
விண்ணுண்ட திருவு ருவம்
விரும்பினார் காண
திண்ணுண்ட திருவே மிக்க
தில்லைச்சிற் றம்ப
பண்ணுண்ட பாட லோடும்
பரமநீ யாடு மாறே. 10

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.24 திருவதிகைவீரட்டானம் -

திருச்சிற்றம்பலம்

239 இரும்புகொப் பளித்த யானை
ஈருரி போர்த்த
கரும்புகொப் பளித்த இன்சொற்
காரிகை பாக
சுரும்புகொப் பளித்த கங்கைத்
துவலைநீர் சடையி
அரும்புகொப் பளித்த சென்னி
அதிகைவீ ரட்ட னாரே. 01

240 கொம்புகொப் பளித்த திங்கட்
கோணல்வெண் பிறையுஞ்
வம்புகொப் பளித்த கொன்றை
வளர்சடை மேலும் வைத்துச்
செம்புகொப் பளித்த மூன்று
மதிலுடன் சுருங்க
அம்புகொப் பளிக்க எய்தார்
அதிகைவீ ரட்ட னாரே. 02

241 விடையுங்கொப் பளித்த பாதம்
விண்ணவர் பரவி
சடையுங்கொப் பளித்த திங்கட்
சாந்தவெண் ணீறு
உடையுங்கொப் பளித்த நாகம்
உள்குவார் உள்ளத்
அடையுங்கொப் பளித்த சீரார்
அதிகைவீ ரட்ட னாறே. 03

242 கறையுங்கொப் பளித்த கண்டர்
காமவேள் உருவம்
இறையுங்கொப் பளித்த கண்ணார்
ஏத்துவார் இடர்கள்
மறையுங்கொப் பளித்த நாவர்
வண்டுண்டு பாடுங்
அறையுங்கொப் பளித்த சென்னி
அதிகைவீ ரட்ட னாரே. 04

243 நீறுகொப் பளித்த மார்பர்
நிழல்திகழ் மழுவொன்
கூறுகொப் பளித்த கோதை
கோல்வளை மாதோர்
ஏறுகொப் பளித்த பாதம்
இமையவர் பரவி
ஆறுகொப் பளித்த சென்னி
அதிகைவீ ரட்ட னாரே. 05

244 வணங்குகொப் பளித்த பாதம்
வானவர் பரவி
பிணங்குகொப் பளித்த சென்னிச்
சடையுடைப் பெருமை
சுணங்குகொப் பளித்த கொங்கைச்
சுரிகுழல் பாக
அணங்குகொப் பளித்த மேனி
அதிகைவீ ரட்ட னாரே. 06

245 சூலங்கொப் பளித்த கையர்
சுடர்விடு மழுவாள்
நூலுங்கொப் பளித்த மார்பில்
நுண்பொறி யரவஞ்
மாலுங்கொப் பளித்த பாகர்
வண்டுபண் பாடுங்
ஆலங்கொப் பளித்த கண்டத்
ததிகைவீ ரட்ட னாறே. 07

246 நாகங்கொப் பளித்த கையர்
நான்மறை யாய
மேகங்கொப் பளித்த திங்கள்
விரிசடை மேலும் வைத்துப்
பாகங்கொப் பளித்த மாதர்
பண்ணுடன் பாடி
ஆகங்கொப் பளித்த தோளார்
அதிகைவீ ரட்ட னாரே. 08

247 பரவுகொப் பளித்த பாடல்
பண்ணுடன் பத்தர்
விரவுகொப் பளித்த கங்கை
விரிசடை மேவ வைத்து
இரவுகொப் பளித்த கண்டர்
ஏத்துவா ரிடர்கள்
அரவுகொப் பளித்த கையர்
அதிகைவீ ரட்ட னாரே. 09

248 தொண்டைகொப் பளித்த செவ்வாய்த்
துடியிடைப் பரவை
கொண்டைகொப் பளித்த கோதைக்
கோல்வளை பாக
வண்டுகொப் பளித்த தீந்தேன்
வரிக்கயல் பருகி
கெண்டைகொப் பளித்த தெண்ணீர்க்
கெடிலவீ ரட்ட னாரே. 10

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.25 திருவதிகைவீரட்டானம் -

திருச்சிற்றம்பலம்

249 வெண்ணிலா மதியந் தன்னை
விரிசடை மேவ வைத்து
உண்ணிலாப் புகுந்து நின்றங்
குணர்வினுக் குணரக்
விண்ணிலார் மீயச் சூரர்
வேண்டுவார் வேண்டு
அண்ணியார் பெரிதுஞ் சேயார்
அதிகைவீ ரட்ட னாரே. 01

250 பாடினார் மறைகள் நான்கும்
பாயிருள் புகுந்தென்
கூடினார் கூட லால
வாயிலார் நல்ல
சூடினார் சூடல் மேவிச்

சூழ்சுடர்ச் சுடலை
றாடினார் ஆடல் மேவி
அதிகைவீ ரட்ட னாரே. 02

251 ஊனையே கழிக்க வேண்டில்
உணர்மின்கள் உள்ளத்
தேனைய மலர்கள் கொண்டு
சிந்தையுட் சிந்திக்
ஏனைய பலவு மாகி
இமையவர் ஏத்த
ஆனையின் உரிவை போர்த்தார்
அதிகைவீ ரட்ட னாரே. 03

252 துருத்தியாங் குரம்பை தன்னில்
தொண்ணூற்றங் கறுவர்
விருத்திதான் தருக வென்று
வேதனை பலவுஞ்
வருத்தியால் வல்ல வாறு
வந்துவந் தடைய
அருத்தியார்க் கன்பர் போலும்
அதிகைவீ ரட்ட னாரே. 04

253 பத்தியால் ஏத்தி நின்று
பணிபவர் நெஞ்சத்
துத்திஐந் தலைய நாகஞ்
சூழ்சடை முடிமேல் வைத்து
உத்தர மலையர் பாவை
உமையவள் நடுங்க
அத்தியின் உரிவை போர்த்தார்
அதிகைவீ ரட்ட னாரே. 05

254 வரிமுரி பாடி யென்றும்
வல்லவா றடைந்து
கரியுரி மூட வல்ல
கடவுளைக் காலத்
சுரிபுரி விரிகு ழலாள்
துடியிடைப் பரவை
அரிவையோர் பாகர் போலும்
அதிகைவீ ரட்ட னாரே. 06

255 நீதியால் நினைசெய் நெஞ்சே
நிமலனை நித்த
பாதியாம் உமைதன் னோடும்
பாகமாய் நின்ற
சோதியாய்ச் சுடர்வி ளக்காய்ச்
சுண்ணவெண் ணீற
ஆதியும் ஈறு மானார்
அதிகைவீ ரட்ட னாரே. 07

256 எல்லியும் பகலு மெல்லாந்
துஞ்சுவேற் கொருவர் வந்து
புல்லிய மனத்துக் கோயில்
புக்கனர் காம
வில்லிஐங் கணையி னானை
வெந்துக நோக்கி
அல்லியம் பழன வேலி
அதிகைவீ ரட்ட னாரே. 08

257 ஒன்றவே யுணர்தி ராகில்
ஓங்காரத் தொருவ
வென்றஐம் புலன்கள் தம்மை
விலக்குதற் குரியீ
நன்றவன் நார ணனும்
நான்முகன் நாடிக்
றன்றவர்க் கரியர் போலும்
அதிகைவீ ரட்ட னாரே. 09

258 தடக்கையால் எடுத்து வைத்துத்
தடவரை குலுங்க ஆர்த்துக்
கிடக்கையால் இடர்க ளோங்கக்
கிளர்மணி முடிகள்
முடக்கினார் திருவி ரலான்
முருகமர் கோதை
தடக்கினார் என்னை யாளும்
அதிகைவீ ரட்ட னாரே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.26 திருவதிகைவீரட்டானம் -

திருச்சிற்றம்பலம்

259 நம்பனே எங்கள் கோவே
நாதனே ஆதி
பங்கனே பரம யோகி
என்றென்றே பரவி
செம்பொனே பவளக் குன்றே
திகழ்மலர்ப் பாதங்
அன்பனே அலந்து போனேன்
அதிகைவீ ரட்ட னாரே. 01

260 பொய்யினால் மிடைந்த போர்வை
புரைபுரை அழுகி
மெய்யனாய் வாழ மாட்டேன்
வேண்டிற்றொன் றைவர்
செய்யதா மரைகள் அன்ன
சேவடி இரண்டுங்
ஐயநான் அலந்து போனேன்
அதிகைவீ ரட்ட னாரே. 02

261 நீதியால் வாழ மாட்டேன்
நித்தலுந் தூயே
ஓதியும் உணர மாட்டேன்
உன்னையுள் வைக்க
சோதியே சுடரே உன்றன்
தூமலர்ப் பாதங்
ஆதியே அலந்து போனேன்
அதிகைவீ ரட்ட னாரே. 03

262 தெருளுமா தெருள மாட்டேன்
தீவினைச் சுற்ற
பொருளுளே அழுந்தி நாளும்
போவதோர் நெறியுங்
இருளுமா மணிகண் டாநின்

இணையடி இரண்டுங்
அருளுமா றருள வேண்டும்
அதிகைவீ ரட்ட னாரே. 04

263 அஞ்சினால் இயற்றப் பட்ட
ஆக்கைபெற் றதனுள்
அஞ்சினால் அடர்க்கப் பட்டிங்
குழிதரும் ஆத
அஞ்சினால் உய்க்கும் வண்ணங்
காட்டினாய்க் கச்சந்
அஞ்சினால் பொலிந்த சென்னி
அதிகைவீ ரட்ட னாரே. 05

264 உறுகயி றூசல் போல
ஒன்றுவிட் டொன்று
மறுகயி றூசல் போல
வந்துவந் துலவு
பெறுகயி றூசல் போலப்
பிறைபுல்கு சடையாய்
தறுகயி றூச லானேன்
அதிகைவீ ரட்ட னாரே. 06

265 கழித்திலேன் காம வெந்நோய்
காதன்மை என்னும்
ஒழித்திலேன் ஊன்கண் நோக்கி
உணர்வெனும் இமைதி றந்து
விழித்திலேன் வெளிறு தோன்ற
வினையெனுஞ் சரக்குக்
அழித்திலேன் அயர்த்துப் போனேன்
அதிகைவீ ரட்ட னாரே. 07

266 மன்றத்துப் புன்னை போல
மரம்படு துயர
ஒன்றினால் உணர மாட்டேன்
உன்னையுள் வைக்க
கன்றிய காலன் வந்து
கருக்குழி விழுப்ப
அன்றினான் அலமந் திட்டேன்
அதிகைவீ ரட்ட னாரே. 08

267 பிணிவிடா ஆக்கை பெற்றேன்
பெற்றமொன் றேறு
பணிவிடா இடும்பை யென்னும்
பாசனத் தழுந்து
துணிவிலேன் தூய னல்லேன்
தூமலர்ப் பாதங்
அணியனாய் அறிய மாட்டேன்
அதிகைவீ ரட்ட னாரே. 09

268 திருவினாள் கொழுந னாருந்
திசைமுக முடைய
இருவரும் எழுந்தும் வீழ்ந்தும்
இணையடி காண
ஒருவனே எம்பி ரானே
உன்திருப் பாதங்
அருவனே அருள வேண்டும்
அதிகைவீ ரட்ட னாரே. 10

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.27 திருவதிகைவீரட்டானம் -

திருச்சிற்றம்பலம்

269 மடக்கினார் புலியின் தோலை
மாமணி நாகங்
முடக்கினார் முகிழ்வெண் டிங்கள்
மொய்சடைக் கற்றை
தொடக்கினார் தொண்டைச் செவ்வாய்த்
துடியிடைப் பரவை
அடக்கினார் கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே. 01

270 சூடினார் கங்கை யாளைச்
சூடிய துழனி
கூடினாள் நங்கை யாளும்
ஊடலை ஒழிக்க
பாடினார் சாம வேதம்
பாடிய பாணி
ஆடினார் கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே. 02

271 கொம்பினார் குழைத்த வேனற்
கோமகன் கோல
நம்பினார் காண லாகா
வகையதோர் நடலை
வெம்பினார் மதில்கள் மூன்றும்
வில்லிடை எரித்து
அம்பினார் கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே. 03

272 மறிபடக் கிடந்த கையர்
வளரிள மங்கை
செறிபடக் கிடந்த செக்கர்ச்
செழுமதிக் கொழுந்து
பொறிபடக் கிடந்த நாகம்
புகையுமிழ்ந் தழல
கிறிபட நடப்பர் போலுங்
கெடிலவீ ரட்ட னாரே. 04

273 நரிவரால் கவ்வச் சென்று
நற்றசை இழந்த
தெரிவரால் மால்கொள் சிந்தை
தீர்ப்பதோர் சிந்தை
வரிவரால் உகளுந் தெண்ணீர்க்
கழனிசூழ் பழன
அரிவரால் வயல்கள் சூழ்ந்த
அதிகைவீ ரட்ட னாரே. 05

274 புள்ளலைத் துண்ட ஓட்டில்
உண்டுபோய் பலாசங்
சுள்ளலைச் சுடலை வெண்ணீ
றணிந்தவர் மணிவெள்
துள்ளலைப் பாகன் றன்னைத்

தொடர்ந்திங்கே கிடக்கின்
அள்ளலைக் கடப்பித் தாளும்
அதிகைவீ ரட்ட னாரே. 06

275 நீறிட்ட நுதலர் வேலை
நீலஞ்சேர் கண்டர்
கூறிட்ட மெய்ய ராகிக்
கூறினார் ஆறும்
கீறிட்ட திங்கள் சூடிக்
கிளர்தரு சடையி
ஆறிட்டு முடிப்பர் போலும்
அதிகைவீ ரட்ட னாரே. 07

276 காணிலார் கருத்தில் வாரார்
திருத்தலார் பொருத்த
ஏணிலார் இறப்பும் இல்லார்
பிறப்பிலார் துறக்க
நாணிலார் ஐவ ரோடும்
இட்டெனை விரவி
ஆணலார் பெண்ணும் அல்லார்
அதிகைவீ ரட்ட னாரே. 08

இப்பதிகத்தில் 9-ம் செய்யுள்
சிதைந்து போயிற்று. 09

277 தீர்த்தமா மலையை நோக்கிச்
செருவலி அரக்கன்
பேர்த்தலும் பேதை அஞ்சப்
பெருவிர லதனை
சீர்த்தமா முடிகள் பத்துஞ்
சிதறுவித் தவனை
ஆர்த்தவாய் அலற வைத்தார்
அதிகைவீ ரட்ட னாரே. 10

திருச்சிற்றம்பலம்
******************************

## 4.28 திருவதிகைவீரட்டானம் -

திருச்சிற்றம்பலம்

278 முன்பெலாம் இளைய காலம்
மூர்த்தியை நினையா
கண்கண இருமி நாளுங்
கருத்தழிந் தருத்த
பின்பக லுணங்கல் அட்டும்
பேதைமார் போன்றேன்
அன்பனாய் வாழ மாட்டேன்
அதிகைவீ ரட்ட னாரே. 01

279 கறைப்பெருங் கண்டத் தானே
காய்கதிர் நமனை
நிறைப்பெருங் கடலைக் கண்டேன்
நீள்வரை யுச்சி
பிறைப்பெருஞ் சென்னி யானே
பிஞ்ஞகா இவைய னைத்தும்
அறுப்பதோர் உபாயங் காணேன்
அதிகைவீ ரட்ட னாரே. 02

280 நாதனா ரென்ன நாளும்
நடுங்கின ராகித்
ஏதங்கள் அறிய மாட்டார்
இணையடி தொழுதோம்
ஆதனா னவனென் றெள்கி
அதிகைவீ ரட்ட
பாதநான் பரவா துய்க்கும்
பழவினைப் பரிசி லேனே. 03

281 சுடலைசேர் சுண்ண மெய்யர்
சுரும்புண விரிந்த
படலைசேர் அலங்கல் மார்பர்
பழனஞ்சேர் கழனித்
மடலைநீர் கிழிய வோடி
அதனிடை மணிகள் சிந்துங்
கெடிலவீ ரட்ட மேய
கிளர்சடை முடிய னாரே. 04

282 மந்திர முள்ள தாக
மறிகட லெழுநெய்
இந்திரன் வேள்வித் தீயில்
எழுந்ததோர் கொழுந்தின்
சிந்திர மாக நோக்கித்
தெருட்டுவார் தெருட்ட வந்து
கந்திரம் முரலுஞ் சோலைக்
கானலங் கெடிலத் தாரே. 05

இப்பதிகத்தில் 6,7,8,9-ம் செய்யுட்கள்
சிதைந்து போயின. 06-09

283 மைஞ்ஞல மனைய கண்ணாள்
பங்கன்மா மலையை
மெய்ஞ்ஞரம் புதிரம் பில்க
விசைதணிந் தரக்கன் வீழ்ந்து
கைஞ்ஞரம் பெழுவிக் கொண்டு
காதலால் இனிது
கின்னரங் கேட்டு கந்தார்
கெடிலவீ ரட்ட னாரே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.29 திருச்செம்பொன்பள்ளி - திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

284 ஊனினுள் ளுயிரை வாட்டி
யுணர்வினார்க் கெளிய
வானினுள் வான வர்க்கும்
அறியலா காத
நானெனிற் றானே யென்னு
ஞானத்தார் பத்தர்
தேனும்இன் னமுது மானார்
திருச்செம்பொன் பள்ளி யாரே. 01

285 நொய்யவர் விழுமி யாரும்
நூலினுள் நெறியைக்
மெய்யவர் பொய்யு மில்லார்
உடலெனும் இடிஞ்சில்
நெய்யமர் திரியு மாகி
நெஞ்சத்துள் விளக்கு
செய்யவர் கரிய கண்டர்
திருச்செம்பொன் பள்ளி யாரே. 02

286 வெள்ளியர் கரியர் செய்யர்
விண்ணவ ரவர்கள்
ஒள்ளியர் ஊழி யூழி
யுலகம தேத்த
பள்ளியர் நெஞ்சத் துள்ளார்
பஞ்சமம் பாடி
தெள்ளியர் கள்ளந் தீர்ப்பார்
திருச்செம்பொன் பள்ளி யாரே. 03

287 தந்தையுந் தாயு மாகித்
தானவன் ஞான
முந்திய தேவர் கூடி
முறைமுறை இருக்குச்
எந்தைநீ சரண மென்றங்
கிமையவர் பரவி
சிந்தையுட் சிவம தானார்
திருச்செம்பொன் பள்ளி யாரே. 04

288 ஆறுடைச் சடையர் போலும்
அன்பருக் கன்பர்
கூறுடை மெய்யர் போலுங்
கோளர வரையர்
நீறுடை யழகர் போலும்
நெய்தலே கமழு
சேறுடைக் கமல வேலித்
திருச்செம்பொன் பள்ளி யாரே. 05

289 ஞாலமும் அறிய வேண்டின்
நன்றெனு வாழ
காலமுங் கழிய லான
கள்ளத்தை ஒழிய
கோலமும் வேண்டா ஆர்வச்
செற்றங்கள் குரோத
சீலமும் நோன்பு மாவார்
திருச்செம்பொன் பள்ளி யாரே. 06

290 புரிகாலே நேசஞ் செய்ய
இருந்தபுண் டரீகத்
எரிகாலே மூன்று மாகி
இமையவர் தொழநின்
தெரிகாலே மூன்று சந்தி
தியானித்து வணங்க
திரிகாலங் கண்ட எந்தை
திருச்செம்பொன் பள்ளி யாரே. 07

291 காருடைக் கொன்றை மாலை
கதிர்மதி அரவி
நீருடைச் சடையுள் வைத்த
நீதியார் நீதி

பாரொடு விண்ணும் மண்ணும்
 பதினெட்டுக் கணங்க
சீரொடு பாட லானார்
 திருச்செம்பொன் பள்ளி யாரே. 08

292 ஓவாத மறைவல் லானும்
 ஓதநீர் வண்ணன்
மூவாத பிறப்பி லாரும்
 முனிகளா னார்கள் ஏத்தும்
பூவான மூன்றும் முந்நூற்
 றறுபது மாகும்
தேவாதி தேவ ரென்றுந்
 திருச்செம்பொன் பள்ளி யாரே. 09

293 அங்கங்க ளாறு நான்கும்
 அந்தணர்க் கருளிச் செய்து
சங்கங்கள் பாட ஆடுஞ்
 சங்கரன் மலைஎ
அங்கங்கள் உதிர்ந்து சோர
 அலறிட அடர்த்து
செங்கண்வெள் ளேற தேறுந்
 திருச்செம்பொன் பள்ளி யாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.30 திருக்கழிப்பாலை - திரு நேரிசை

திருச்சிற்றம்பலம்

294 நங்கையைப் பாகம் வைத்தார்
 ஞானத்தை நவில
அங்கையில் அனலும் வைத்தார்
 ஆனையின் உரிவை
தங்கையின் யாழும் வைத்தார்
 தாமரை மலரும்
கங்கையைச் சடையுள் வைத்தார்
 கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 01

295 விண்ணினை விரும்ப வைத்தார்
 வேள்வியை வேட்க
பண்ணினைப் பாட வைத்தார்
 பத்தர்கள் பயில
மண்ணினைத் தாவ நீண்ட
 மாலினுக் கருளும்
கண்ணினை நெற்றி வைத்தார்
 கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 02

296 வாமனை வணங்க வைத்தார்
 வாயினை வாழ்த்த
சோமனைச் சடைமேல் வைத்தார்
 சோதியுட் சோதி
ஆமனை யாட வைத்தார்

அன்பெனும் பாசம்
காமனைக் காய்ந்த கண்ணார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 03

297 அரியன அங்கம் வேதம்
அந்தணர்க் கருளும்
பெரியன புரங்கள் மூன்றும்
பேரழ லுண்ண
பரியதீ வண்ண ராகிப்
பவளம்போல் நிறத்தை
கரியதோர் கண்டம் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 04

298 கூரிருள் கிழிய நின்ற
கொடுமழுக் கையில்
பேரிருள் கழிய மல்கு
பிறைபுனற் சடையுள்
ஆரிருள் அண்டம் வைத்தார்
அறுவகைச் சமயம்
காரிருள் கண்டம் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 05

299 உட்டங்கு சிந்தை வைத்தார்
உள்குவார்க் குள்ளம்
விட்டங்கு வேள்வி வைத்தார்
வெந்துயர் தீர
நட்டங்கு நடமும் வைத்தார்
ஞானமு நவில
கட்டங்கந் தோண்மேல் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 06

300 ஊனப்பே ரொழிய வைத்தார்
ஓதியே உணர
ஞானப்பேர் நவில வைத்தார்
ஞானமு நடுவும்
வானப்பே ராறும் வைத்தார்
வைகுந்தற் காழி
கானப்பேர் காதல் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே 07

301 கொங்கினும் அரும்பு வைத்தார்
கூற்றங்கள் கெடுக்க
சங்கினுள் முத்தம் வைத்தார்
சாம்பலும் பூச
அங்கமும் வேதம் வைத்தார்
ஆலமும் உண்டு
கங்குலும் பகலும் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 08

302 சதுர்முகன் தானும் மாலுந்
தம்மிலே இகலக்
எதிர்முக மின்றி நின்ற
எரியுரு வதனை
பிதிர்முகன் காலன் றன்னைக்
கால்தனிற் பிதிர
கதிர்முகஞ் சடையில் வைத்தார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 09

303 மாலினாள் நங்கை அஞ்ச
மதிலிலங் கைக்கு
வேலினான் வெகுண் டெடுக்கக்
காண்டலும் வேத
நூலினான் நோக்கி நக்கு
நொடிப்பதோ ரளவில்
காலினால் ஊன்றி யிட்டார்
கழிப்பாலைச் சேர்ப்ப னாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.31 திருக்கடவூர் -

திருச்சிற்றம்பலம்

304 பொள்ளத்த காய மாயப்
பொருளினைப் போக
வெள்ளத்தைக் கழிக்க வேண்டில்
விரும்புமின் விளக்குத்
உள்ளத்த திரியொன் றேற்றி
உணருமா றுணர
கள்ளத்தைக் கழிப்பர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே. 01

305 மண்ணிடைக் குரம்பை தன்னை
மதித்துநீர் மைய
விண்ணிடைத் தரும ராசன்
வேண்டினால் விலக்கு
பண்ணிடைச் சுவைகள் பாடி
ஆடிடும் பத்தர்க்
கண்ணிடை மணியர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே. 02

306 பொருத்திய குரம்பை தன்னுட்
பொய்நடை செலுத்து
ஒருத்தனை யுணர மாட்டேர்
உள்ளத்திற் கொடுமை
வருத்தின களிறு தன்னை
வருத்துமா வருத்த
கருத்தினில் இருப்பர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே. 03

307 பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தற்குப் பத்த
அரும்பொடு மலர்கள் கொண்டாங்
கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்ட னாரே. 04

308 தலக்கமே செய்து வாழ்ந்து
தக்கவா றொன்று
விலக்குவா ரிலாமை யாலே
விளக்கதிற் கோழி
மலக்குவார் மனத்தி னுள்ளே
காலனார் தமர்கள் வந்து
கலக்கநான் கலங்கு கின்றேன்
கடவூர்வீ ரட்ட னாரே. 05

309 பழியுடை யாக்கை தன்னிற்
பாழுக்கே நீரி றைத்து
வழியிடை வாழ மாட்டேன்
மாயமுந் தெளிய
அழிவுடைத் தாய வாழ்க்கை
ஐவரால் அலைக்கப்
கழியிடைத் தோணி போன்றேன்
கடவூர்வீ ரட்ட னாரே. 06

310 மாயத்தை அறிய மாட்டேன்
மையல்கொள் மனத்த
பேயொத்துக் கூகை யானேன்
பிஞ்ஞகா பிறப்பொன்
நேயத்தால் நினைய மாட்டேன்
நீதனே நீசனேன்
காயத்தைக் கழிக்க மாட்டேன்
கடவூர்வீ ரட்ட னாரே. 07

311 பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து
பாழுக்கே நீரி
உற்றலாற் கயவர் தேறா
ரென்னுங்கட் டுரையோ
எற்றுளேன் என்செய் கேன்நான்
இடும்பையால் ஞான மேதுங்
கற்றிலேன் களைகண் காணேன்
கடவூர்வீ ரட்ட னாரே. 08

312 சேலின்நேர் அனைய கண்ணார்
திறம்விட்டுச் சிவனுக்
பாலுநற் றயிர்நெய் யோடு
பலபல ஆட்டி
மாலினைத் தவிர நின்ற
மார்க்கண்டற் காக
காலனை யுதைப்பர் போலுங்
கடவூர்வீ ரட்ட னாரே. 09

313 முந்துரு இருவ ரோடு
மூவரு மாயி
இந்திர னோடு தேவர்
இருடிகள் இன்பஞ்
வந்திரு பதுகள் தோளால்
எடுத்தவன் வலியை
கந்திரு வங்கள் கேட்டார்
கடவூர்வீ ரட்ட னாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.32 திருப்பயற்றூர் - திரு நேரிசை

திருச்சிற்றம்பலம்

314 உரித்திட்டார் ஆனை யின்றோள்
உதிரவா றொழுகி
விரித்திட்டார் உமையா ளஞ்சி
விரல்விதிர்த் தலக்கண்
தரித்திட்டார் சிறிது போது
தரிக்கில ராகித்
சிரித்திட்டார் எயிறு
திருப்பயற் றூர னாரே. 01

315 உவந்திட்டங் குமையோர் பாகம்
வைத்தவர் ஊழி
பவந்திட்ட பரம னார் தாம்
மலைச்சிலை நாகம்
கவர்ந்திட்ட புரங்கள் மூன்றுங்
கனலெரி யாகச்
சிவந்திட்ட கண்ணர் போலுந்
திருப்பயற் றூர னாரே. 02

316 நங்களுக் கருள தென்று
நான்மறை யோது
தங்களுக் கருளும் எங்கள்
தத்துவன் றழலன்
எங்களுக் கருள்செய் யென்ன
நின்றவன் நாகம்
திங்களுக் கருளிச் செய்தார்
திருப்பயற் றூர னாரே. 03

317 பார்த்தனுக் கருளும் வைத்தார்
பாம்பரை யாட
சாத்தனை மகனா வைத்தார்
சாமுண்டி சாம
கூத்தொடும் பாட வைத்தார்
கோளரா மதியம்
தீர்த்தமுஞ் சடைமேல் வைத்தார்
திருப்பயற் றூர னாரே. 04

318 மூவகை மூவர் போலும்
முற்றுமா நெற்றிக்
நாவகை நாவர் போலும்
நான்மறை ஞான
ஆவகை யாவர் போலும்
ஆதிரை நாளர்
தேவர்கள் தேவர் போலுந்
திருப்பயற் றூர னாரே. 05

319 ஞாயிறாய் நமனு மாகி
வருணனாய்ச் சோம
தீயறா நிருதி வாயுத்
திப்பிய சாந்த

பேயறாக் காட்டி லாடும்
பிஞ்ஞகன் எந்தை
தீயறாக் கையர் போலுந்
திருப்பயற் றூர னாரே. 06

320 ஆவியாய் அவியு மாகி
அருக்கமாய்ப் பெருக்க
பாவியர் பாவந் தீர்க்கும்
பரமனாய்ப் பிரம
காவியங் கண்ண ளாகிக்
கடல்வண்ண மாகி
தேவியைப் பாகம் வைத்தார்
திருப்பயற் றூர னாரே. 07

321 தந்தையாய்த் தாயு மாகித்
தரணியாய்த் தரணி
கெந்தையு மென்ன நின்ற
ஏழுல குடனு
எந்தையெம் பிரானே என்றென்
றுள்குவா ருள்ளத்
சிந்தையுஞ் சிவமு மாவார்
திருப்பயற் றூர னாரே. 08

322 புலன்களைப் போக நீக்கிப்
புந்தியை யொருங்க வைத்து
இலங்களைப் போக நின்று
இரண்டையும் நீக்கி
மலங்களை மாற்ற வள்ளார்
மனத்தினுட் போக
சினங்களைக் களைவர் போலுந்
திருப்பயற் றூர னாரே. 09

323 மூர்த்திதன் மலையின் மீது
போகாதா முனிந்து
பார்த்துத்தான் பூமி மேலாற்
பாய்ந்துடன் மலையைப்
ஆர்த்திட்டான் முடிகள் பத்தும்
அடர்த்துநல் லரிவை
தேத்தெத்தா என்னக் கேட்டார்
திருப்பயற் றூர னாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.33 திருமறைக்காடு - திரு

திருச்சிற்றம்பலம்

324 இந்திர னோடு தேவர்
இருடிகள் ஏத்து
சுந்தர மானார் போலுந்
துதிக்கலாஞ் சோதி
சந்திர னோடுங் கங்கை

அரவையுஞ் சடையுள் வைத்து
மந்திர மானார் போலும்
மாமறைக் காட னாரே. 01

325 தேயன நாட ராகித்
தேவர்கள் தேவர்
பாயன நாட றுக்கும்
பத்தர்கள் பணிய
காயன நாடு கண்டங்
கதனுளார் காள
மாயன நாடர் போலும்
மாமறைக் காட னாரே. 02

326 அறுமையிவ் வுலகு தன்னை
யாமெனக் கருதி
வெறுமையின் மனைகள் வாழ்ந்து
வினைகளால் நலிவு
சிறுமதி அரவு கொன்றை
திகழ்தரு சடையுள் வைத்து
மறுமையும் இம்மை யாவார்
மாமறைக் காட னாரே. 03

327 கால்கொடுத் திருகை யேற்றிக்
கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற்
சுவரெடுத் திரண்டு
ஏல்வுடைத் தாவ மைத்தங்
கேழுசா லேகம்
மால்கொடுத் தாவி வைத்தார்
மாமறைக் காட னாரே. 04

328 விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் விரும்பி
பண்ணினார் கின்ன ரங்கள்
பத்தர்கள் பாடி
கண்ணினார் கண்ணி னுள்ளே
சோதியாய் நின்ற
மண்ணினார் வலங்கொண் டேத்தும்
மாமறைக் காட னாரே. 05

329 அங்கையுள் அனலும் வைத்தார்
அறுவகைச் சமயம்
தங்கையில் வீணை வைத்தார்
தம்மடி பரவ
திங்களைக் கங்கை யோடு
திகழ்தரு சடையுள்
மங்கையைப் பாகம் வைத்தார்
மாமறைக் காட னாரே. 06

330 கீதராய்க் கீதங் கேட்டுக்
கின்னரந் தன்னை
வேதராய் வேத மோதி
விளங்கிய சோதி
ஏதராய் நட்ட மாடி
இட்டமாய்க் கங்கை
மாதையோர் பாகம் வைத்தார்
மாமறைக் காட னாரே. 07

331 கனத்தினார் வலி யுடைய
கடிமதில் அரணம்
சினத்தினுட் சினமாய் நின்று
தீயெழச் செற்றார்
தனத்தினைத் தவிர்ந்து நின்று
தம்மடி பரவு
மனத்தினுள் மாசு தீர்ப்பார்
மாமறைக் காட னாரே. 08

332 தேசனைத் தேசன் றன்னைத்
தேவர்கள் போற்றி
வாசனை செய்து நின்று
வைகலும் வணங்கு
காசினைக் கனலை என்றுங்
கருத்தினில் வைத்த
மாசினைத் தீர்ப்பர் போலும்
மாமறைக் காட னாரே. 09

333 பிணியுடை யாக்கை தன்னைப்
பிறப்பறுத் துய்ய
பணியுடைத் தொழில்கள் பூண்டு
பத்தர்கள் பற்றி
துணிவுடை அரக்க னோடி
எடுத்தலுந் தோகை
மணிமுடிப் பத்தி றுத்தார்
மாமறைக் காட னாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.34 திருமறைக்காடு - திரு

திருச்சிற்றம்பலம்

334 தேரையு மேல்க டாவித்
திண்ணமாத் தெளிந்து
யாரையு மேலு ணரா
ஆண்மையான் மிக்கான்
பாரையும் விண்ணும் அஞ்சப்
பரந்த தோள் முடியடர்த்துக்
காரிகை அஞ்ச லென்பார்
கலிமறைக் காட னாரே. 01

335 முக்கிமுன் வெகுண்டெ டுத்த
முடியுடை
நக்கிருந் தூன்றிச் சென்னி
நாண்மதி வைத்த
அக்கர வாமை பூண்ட
அழகனார் கருத்தி
தெக்குநீர்த் திரைகள் மோதுந்
திருமறைக் காட னாரே. 02

336 மிகப்பெருத் துலாவ மிக்கா
நக்கொரு தேர்க
அகப்படுத் தென்று தானும்
ஆண்மையால் மிக்க
உகைத்தெடுத் தான்ம லையை
ஊன்றலும் அவனை
நகைப்படுத் தருளி னானூர்
நான்மறைக் காடு தானே. 03

337 அந்தரந் தேர்க டாவி
யாரிவ னென்று
உந்தினான் மாம லையை
ஊன்றலும் ஒள்ள
பந்தமாந் தலைகள் பத்தும்
வாய்கள்விட் டலறி
சிந்தனை செய்து விட்டார்
திருமறைக் காட னாரே. 04

338 தடுக்கவுந் தாங்க வொண்ணாத்
தன்வலி யுடைய
கடுக்கவோர் தேர்க டாவிக்
கையிரு பதுக
எடுப்பன்நான் என்ன பண்ட
மென்றெடுத் தானை
அடுக்கவே வல்ல னூராம்
அணிமறைக் காடு தானே. 05

339 நாண்முடிக் கின்ற சீரான்
நடுங்கியே மீது
கோள்பிடித் தார்த்த கையான்
கொடியன்மா வலிய
நீண்முடிச் சடையர் சேரும்
நீள்வரை யெடுக்க
தோண்முடி நெரிய வைத்தார்
தொன்மறைக் காட னாரே. 06

340 பத்துவாய் இரட்டிக் கைக
ளுடையன்மா வலிய
பொத்திவாய் தீமை செய்த
பொருவலி அரக்கர்
கத்திவாய் கதற அன்று
கால்விர லூன்றி
முத்துவாய்த் திரைகள் மோதும்
முதுமறைக் காட னாரே. 07

341 பக்கமே விட்ட கையான்
பாங்கிலா மதிய
புக்கனன் மாம லைக்கீழ்ப்
போதுமா றறிய
மிக்கமா மதிகள் கெட்டு
வீரமும் இழந்த
நக்கன பூத மெல்லாம்
நான்மறைக் காட னாரே. 08

342 நாணஞ்சு கைய னாகி
நான்முடி பத்தி
பாணஞ்சு முன்னி ழந்த
பாங்கிலா மதிய

நீணஞ்சு தானு ணரா
நின்றெடுத் தானை
ஏணஞ்சு கைகள் செய்தார்
எழில்மறைக் காட னாரே. 09

343 கங்கைநீர் சடையுள் வைக்கக்
காண்டலும் மங்கை
தென்கையான் தேர்க டாவிச்
சென்றெடுத் தான்
முன்கைமா நரம்பு வெட்டி
முன்னிருக் கிசைகள்
அங்கைவாள் அருளி னானூர்
அணிமறைக் காடு தானே. 10

திருச்சிற்றம்பலம்

*****************************

## 4.35 திருவிடைமருது -

திருச்சிற்றம்பலம்

344 காடுடைச் சுடலை நீற்றர்
கையில்வெண் டலையர்
பாடுடைப் பூதஞ் சூழப்
பரமனார் மருத
தோடுடைக் கைதை யோடு
சூழ்கிடங் கதனைச்
ஏடுடைக் கமல வேலி
இடைமரு திடங்கொண் டாரே. 01

345 முந்தையார் முந்தி யுள்ளார்
மூவர்க்கு முதல்வ
சந்தியார் சந்தி யுள்ளார்
தவநெறி தரித்து
சிந்தையார் சிந்தை யுள்ளார்
சிவநெறி யனைத்து
எந்தையார் எம்பி ரானார்
இடைமரு திடங் கொண்டாரே. 02

346 காருடைக் கொன்றை மாலை
கதிர்மணி அரவி
நீருடைச் சடையுள் வைத்த
நீதியார் நீதி
போருடை விடையொன் றேற
வல்லவர் பொன்னித்
ஏருடைக் கமல மோங்கும்
இடைமரு திடங் கொண்டாரே. 03

347 விண்ணினார் விண்ணின் மிக்கார்
வேதங்கள் நான்கும்
பண்ணினார் பண்ணின் மிக்க
பாடலார் பாவந்
கண்ணினார் கண்ணின் மிக்க
நுதலினார் காமர்
எண்ணினார் எண்ணின் மிக்கார்
இடைமரு திடங் கொண்டாரே. 04

348 வேதங்கள் நான்குங் கொண்டு
விண்ணவர் பரவி
பூதங்கள் பாடி யாட
லுடையவன் புனிதன்
பாதங்கள் பரவி நின்ற
பத்தர்கள் தங்கள்
ஏதங்கள் தீர நின்றார்
இடைமரு திடங் கொண்டாரே. 05

349 பொறியர வரையி லார்த்துப்
பூதங்கள் பலவுஞ்
முறிதரு வன்னி கொன்றை
முதிர்சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க
வைத்தவர் எத்தி
ஏறிதரு புனல்கொள் வேலி
இடைமரு திடங் கொண்டாரே. 06

350 படரொளி சடையி னுள்ளாற்
பாய்புனல் அரவி
சுடரொளி மதியம் வைத்துத்
தூவொளி தோன்றும்
அடரொளி விடையொன் றேற
வல்லவர் அன்பர்
இடரவை கெடவு நின்றார்
இடைமரு திடங் கொண்டாரே. 07

351 கமழ்தரு சடையி னுள்ளாற்
கடும்புனல் அரவி
தவழ்தரு மதியம் வைத்துத்
தன்னடி பலரும்
மழுவது வலங்கை யேந்தி
மாதொரு பாக
எழில்தரு பொழில்கள் சூழ்ந்த
இடைமரு திடங் கொண்டாரே. 08

352 பொன்றிகழ் கொன்றை மாலை
புதுப்புனல் வன்னி
மின்றிகழ் சடையில் வைத்து
மேதகத் தோன்று
அன்றவர் அளக்க லாகா
அனலெரி யாகி
இன்றுட னுலக மேத்த
இடைமரு திடங் கொண்டாரே. 09

353 மலையுடன் விரவி நின்று
மதியிலா அரக்கன்
தலையுட னடர்த்து மீண்டே
தலைவனாய் அருள்கள்
சிலையுடை மலையை வாங்கித்
திரிபுர மூன்றும்
இலையுடைக் கமல வேலி
இடைமரு திடங் கொண்டாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.36 திருப்பழனம் -

திருச்சிற்றம்பலம்

354 ஆடினா ரொருவர் போலு
மலர்கமழ் குழலி
கூடினா ரொருவர் போலுங்
குளிர்புனல் வளைந்த
சூடினா ரொருவர் போலுந்
தூயநன் மறைகள்
பாடினா ரொருவர் போலும்
பழனத்தெம் பரம னாரே. 01

355 போவதோர் நெறியு மானார்
புரிசடைப் புனித
வேவதோர் வினையிற் பட்டு
வெம்மைதான் விடவுங்
கூவல்தான் அவர்கள் கேளார்
குணமிலா ஐவர்
பாவமே தீர நின்றார்
பழனத்தெம் பரம னாரே. 02

356 கண்டராய் முண்ட ராகிக்
கையிலோர் கபால
தொண்டர்கள் பாடி யாடித்
தொழுகழற் பரம
விண்டவர் புரங்க ளெய்த
வேதியர் வேத
பண்டையென் வினைகள் தீர்ப்பார்
பழனத்தெம் பரம னாரே. 03

357 நீரவன் தீயி னோடு
நிழலவன் எழில
பாரவன் விண்ணின் மிக்க
பரமவன் பரம
யாரவ னண்ட மிக்க
திசையினோ டொளிக
பாரகத் தமுத மானார்
பழனத்தெம் பரம னாரே. 04

358 ஊழியா ரூழி தோறும்
உலகினுக் கொருவ
பாழியார் பாவந் தீர்க்கும்
பராபரர் பரம
ஆழியான் அன்னத்
அன்றவர்க் களப்
பாழியார் பரவி யேத்தும்
பழனத்தெம் பரம னாரே. 05

359 ஆலின்கீழ் அறங்க ளெல்லாம்
அன்றவர்க் கருளிச் செய்து
நூலின்கீ ழவர்கட் கெல்லா
நுண்பொரு ளாகி
காலின்கீழ்க் காலன் றன்னைக்

கடுகத்தான் பாய்ந்து
பாலின்கீழ் நெய்யு மானார்
பழனத்தெம் பரம னாரே. 06

360 ஆதித்தன் அங்கி சோமன்
அயனொடு மால்பு
போதித்து நின்று லகிற்
போற்றிசைத் தாரி
சோதித்தா ரேழு லகுஞ்
சோதியுட் சோதி
பாதிப்பெண் ணுருவ மானார்
பழனத்தெம் பரம னாரே. 07

361 காற்றனாற் காலற் காய்ந்து
காருரி போர்த்த
தோற்றனார் கடலுள் நஞ்சைத்
தோடுடைக் காதர்
ஏற்றினார் இளவெண் டிங்கள்
இரும்பொழில் சூழ்ந்த
பாற்றினார் வினைக ளெல்லாம்
பழனத்தெம் பரம னாரே. 08

362 கண்ணனும் பிரம னோடு
காண்கில ராகி
எண்ணியுந் துதித்து மேத்த
எரியுரு வாகி
வண்ணநன் மலர்கள் தூவி
வாழ்த்துவார் வாழ்த்தி
பண்ணுலாம் பாடல் கேட்டார்
பழனத்தெம் பரம னாரே. 09

363 குடையுடை அரக்கன் சென்று
குளிர்கயி லாய
இடைமட வரலை அஞ்ச
எடுத்தலும் இறைவன்
விடையுடை விகிர்தன் றானும்
விரலினா லூன்றி
படைகொடை அடிகள் போலும்
பழனத்தெம் பரம னாரே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.37 திருநெய்த்தானம் -

திருச்சிற்றம்பலம்

364 காலனை வீழச் செற்ற
கழலடி இரண்டும்
மேலவா யிருக்கப் பெற்றேன்
மேதகத் தோன்று
கோலநெய்த் தான மென்னுங்
குளிர்பொழிற் கோயில்
நீலம்வைத் தனைய கண்ட
நினைக்குமா நினைக்கின் றேனே. 01

365 காமனை யன்று கண்ணாற்
கனலெரி யாக
தூபமுந் தீபங் காட்டித்
தொழுமவர்க் கருள்கள் செய்து
சேமநெய்த் தான மென்னுஞ்
செறிபொழிற் கோயில்
வாமனை நினைந்த நெஞ்சம்
வாழ்வுற நினைந்த வாறே. 02

366 பிறைதரு சடையின் மேலே
பெய்புனற் கங்கை
உறைதர வைத்த எங்கள்
உத்தமன் ஊழி
நிறைதரு பொழில்கள் சூழ
நின்றநெய்த் தான
குறைதரும் அடிய வர்க்குக்
குழகனைக் கூட லாமே. 03

367 வடிதரு மழுவொன் றேந்தி
வார்சடை மதியம் வைத்துப்
பொடிதரு மேனி மேலே
புரிதரு நூலர்
நெடிதரு பொழில்கள் சூழ
நின்றநெய்த் தானம்
அடிதரு கழல்கள் ஆர்ப்ப
ஆடுமெம் அண்ண லாரே. 04

368 காடிட மாக நின்று
கனலெரி கையி
பாடிய பூதஞ் சூழப்
பண்ணுடன் பலவுஞ்
ஆடிய கழலார் சீரார்
அந்தண்நெய்த் தானம்
கூடிய குழக னாரைக்
கூடுமா றறிகி லேனே. 05

369 வானவர் வணங்கி யேத்தி
வைகலும் மலர்கள்
தானவர்க் கருள்கள் செய்யும்
சங்கரன் செங்கண்
தேனமர் பொழில்கள் சூழத்
திகழுநெய்த் தானம்
கூனிள மதியி னானைக்
கூடுமா றறிகி லேனே. 06

370 காலதிற் கழல்க ளார்ப்பக்
கனலெரி கையில்
ஞாலமுங் குழிய நின்று
நட்டம தாடு
மேலவர் முகடு தோய
விரிசடை திசைகள்
மாலொரு பாக மாக
மகிழ்ந்தநெய்த் தான னாரே. 07

371 பந்தித்த சடையின் மேலே
பாய்புன லதனை வைத்து
அந்திப்போ தனலு மாடி
அடிகள்ஐ யாறு

வந்திப்பார் வணங்கி நின்று
வாழ்த்துவார் வாயி
சிந்திப்பார் சிந்தை யுள்ளார்
திருந்துநெய்த் தான னாரே. 08

372 சோதியாய்ச் சுடரு மானார்
சுண்ணவெண் சாந்து
ஓதிவா யுலகம் ஏத்த
உகந்துதாம் அருள்கள்
ஆதியாய் அந்த மானார்
யாவரும் இறைஞ்சி
நீதியாய் நியம மாகி
நின்றநெய்த் தான னாரே. 09

373 இலையுடைப் படைகை யேந்தும்
இலங்கையர் மன்னன்
தலையுடன் அடர்த்து மீண்டே
தானவற் கருள்கள் செய்து
சிலையுடன் கணையைச் சேர்த்துத்
திரிபுரம் எரியச்
நிலையுடை யடிகள் போலும்
நின்றநெய்த் தான னாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.38 திருவையாறு -

திருச்சிற்றம்பலம்

374 கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர்பொறி அரவும்
திங்களைத் திகழ வைத்தார்
திசைதிசை தொழவும்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயனை யாற னாரே. 01

375 பொடிதனைப் பூச வைத்தார்
பொங்குவெண் ணூலும்
கடியதோர் நாகம் வைத்தார்
காலனைக் காலில்
வடிவுடை மங்கை தன்னை
மார்பிலோர் பாகம்
அடியிணை தொழவும் வைத்தார்
ஐயனை யாற னாரே. 02

376 உடைதரு கீளும் வைத்தார்
உலகங்க ளனைத்தும்
படைதரு மழுவும் வைத்தார்
பாய்புலித் தோலும்
விடைதரு கொடியும் வைத்தார்

வெண்புரி நூலும்
அடைதர அருளும் வைத்தார்
ஐயனை யாற னாரே. 03

377 தொண்டர்கள் தொழவும் வைத்தார்
தூமதி சடையில்
இண்டையைத் திகழ வைத்தார்
எமக்கென்று மின்பம்
வண்டுசேர் குழலி னாளை
மருவியோர் பாகம்
அண்டவா னவர்கள் ஏத்தும்
ஐயனை யாற னாரே. 04

378 வானவர் வணங்க வைத்தார்
வல்வினை மாய
கானிடை நடமும் வைத்தார்
காமனைக் கனலா
ஆனிடை ஐந்தும் வைத்தார்
ஆட்டுவார்க் கருளும்
ஆனையின் உரிவை வைத்தார்
ஐயனை யாற னாரே. 05

379 சங்கணி குழையும் வைத்தார்
சாம்பல்மெய்ப் பூச
வெங்கதிர் எரிய வைத்தார்
விரிபொழி லனைத்தும்
கங்குலும் பகலும் வைத்தார்
கடுவினை களைய
அங்கம தோத வைத்தார்
ஐயனை யாற னாரே. 06

380 பத்தர்கட் கருளும் வைத்தார்
பாய்விடை யேற
சித்தத்தை ஒன்ற வைத்தார்
சிவமதே நினைய
முத்தியை முற்ற வைத்தார்
முறைமுறை நெறிகள்
அத்தியின் உரிவை வைத்தார்
ஐயனை யாற னாரே. 07

381 ஏறுகந் தேற வைத்தார்
இடைமரு திடமும்
நாறுபூங் கொன்றை வைத்தார்
நாகமும் அரையில்
கூறுமை யாகம் வைத்தார்
கொல்புலித் தோலும்
ஆறுமோர் சடையில் வைத்தார்
ஐயனை யாற னாரே. 08

382 பூதங்கள் பலவும் வைத்தார்
பொங்குவெண் ணீறும்
கீதங்கள் பாட வைத்தார்
கின்னரந் தன்னை
பாதங்கள் பரவ வைத்தார்
பத்தர்கள் பணிய
ஆதியும் அந்தம் வைத்தார்
ஐயனை யாற னாரே. 09

383 இரப்பவர்க் கீய வைத்தார்
ஈபவர்க் கருளும்
கரப்பவர் தங்கட் கெல்லாங்
கடுநர கங்கள்
பரப்புநீர்க் கங்கை தன்னைப்
படர்சடைப் பாகம்
அரக்கனுக் கருளும் வைத்தார்
ஐயனை யாற னாரே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.39 திருவையாறு -

திருச்சிற்றம்பலம்

384 குண்டனாய்ச் சமண ரோடே
கூடிநான் கொண்ட
துண்டனே சுடர்கொள் சோதீ
தூநெறி யாகி
அண்டனே அமரர் ஏறே
திருவையா றமர்ந்த
தொண்டனேன் தொழுதுன் பாதஞ்
சொல்லிநான் திரிகின் றேனே. 01

385 பீலிகை இடுக்கி நாளும்
பெரியதோர் தவமென்
வாலிய தறிகள் போல
மதியிலார் பட்ட
வாலியார் வணங்கி ஏத்துந்
திருவையா றமர்ந்த
டாலியா எழுந்த நெஞ்சம்
அழகிதா எழுந்த வாறே. 02

386 தட்டிடு சமண ரோடே
தருக்கிநான் தவமென்
ஒட்டிடு மனத்தி னீரே
உம்மையான் செய்வ
மொட்டிடு கமலப் பொய்கைத்
திருவையா றமர்ந்த
டொட்டிடும் உள்ளத் தீரே
உம்மைநான் உகந்திட் டேனே. 03

387 பாசிப்பல் மாசு மெய்யர்
பலமிலாச் சமண
நேசத்தா லிருந்த நெஞ்சை
நீக்குமா றறிய
தேசத்தார் பரவி யேத்துந்
திருவையா றமர்ந்த
வாசத்தால் வணங்க வல்லார்
வல்வினை மாயு மன்றே. 04

388 கடுப்பொடி யட்டி மெய்யிற்
கருதியோர் தவமென்
வடுக்களோ டிசைந்த நெஞ்சே
மதியிலி பட்ட
மடுக்களில் வாளை பாயுந்

திருவையா றமர்ந்த
அடுத்துநின் றுன்னு நெஞ்சே
அருந்தவஞ் செய்த வாறே. 05

389 துறவியென் றவம தோரேன்
சொல்லிய செலவு செய்து
உறவினால் அமண ரோடும்
உணர்விலேன் உணர்வொன்
றறவமார் பொழில்கள் சூழ்ந்த
திருவையா றமர்ந்த
மறவிலா நெஞ்சு மேநன்
மதியுனக் கடைந்த வாறே. 06

390 பல்லுரைச் சமண ரோடே
பலபல கால
சொல்லிய செலவு செய்தேன்
சோர்வனான் நினைந்த போது
மல்லிகை மலருஞ் சோலைத்
திருவையா றமர்ந்த
எல்லியும் பகலு மெல்லாம்
நினைந்தபோ தினிய வாறே. 07

391 மண்ணுளார் விண்ணு ளாரும்
வணங்குவார் பாவம்
எண்ணிலாச் சமண ரோடே
இசைந்தனை ஏழை
தெண்ணிலா எறிக்குஞ் சென்னித்
திருவையா றமர்ந்த
கண்ணினாற் காணப் பெற்றுக்
கருதிற்றே முடிந்த வாறே. 08

392 குருந்தம தொசித்த மாலுங்
குலமலர் மேவி
திருந்துநற் றிருவ டியுந்
திருமுடி காண
அருந்தவ முனிவ ரேத்துந்
திருவையா றமர்ந்த
பொருந்திநின் றுன்னு நெஞ்சே
பொய்வினை மாயு மன்றே. 09

393 அறிவிலா அரக்க னோடி
அருவரை எடுக்க
முறுகினான் முறுகக் கண்டு
மூதறி வாளன்
நிறுவினான் சிறுவி ரலால்
நெரிந்துபோய் நிலத்தில்
அறிவினால் அருள்கள் செய்தான்
திருவையா றமர்ந்த தேனே. 10

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.40 திருவையாறு -

திருச்சிற்றம்பலம்

394 தானலா துலக மில்லை
சகமலா தடிமை
கானலா தாட லில்லை
கருதுவார் தங்க
வானலா தருளு மில்லை
வார்குழல் மங்கை
ஆனலா தூர்வ தில்லை
ஐயனை யாற னார்க்கே. 01

395 ஆலலால் இருக்கை இல்லை
அருந்தவ முனிவர்க்
நூலலால் நொடிவ தில்லை
நுண்பொரு ளாய்ந்து
மாலுநான் முகனுங் கூடி
மலரடி வணங்க
ஆலலால் அமுத மில்லை
ஐயனை யாற னார்க்கே. 02

396 நரிபுரி சுடலை தன்னில்
நடமலால் நவிற்ற
சுரிபுரி குழலி யோடுந்
துணையலால் இருக்கை
தெரிபுரி சிந்தை யார்க்குத்
தெளிவலால் அருளு
அரிபுரி மலர்கொண் டேத்தும்
ஐயனை யாற னார்க்கே. 03

397 தொண்டலாற் றுணையு மில்லை
தோலலா துடையு
கண்டலா தருளு மில்லை
கலந்தபின் பிரிவ
பண்டைநான் மறைகள் காணாப்
பரிசின னென்றென்
அண்டவா னவர்கள் ஏத்தும்
ஐயனை யாற னார்க்கே. 04

398 எரியலா லுருவ மில்லை
ஏறலால் ஏற
கரியலாற் போர்வை யில்லை
காண்டகு சோதி
பிரிவிலா அமரர் கூடிப்
பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை
ஐயனை யாற னார்க்கே. 05

399 என்பலாற் கலனு மில்லை
எருதலா லூர்வ
புன்புலால் நாறு காட்டிற்
பொடியலாற் சாந்து
துன்பிலாத் தொண்டர் கூடித்
தொழுதழு தாடிப்
அன்பலாற் பொருளு மில்லை
ஐயனை யாற னார்க்கே. 06

400 கீளலால் உடையு மில்லை
கிளர்பொறி யரவம்
தோளலாற் றுணையு மில்லை
தொத்தலர் கின்ற
வேளலாற் காயப் பட்ட
வீரரு மில்லை
ஆளலாற் கைம்மா றில்லை
ஐயனை யாற னார்க்கே. 07

401 சகமலா தடிமை யில்லை
தானலாற் றுணையு
நகமெலாந் தேயக் கையான்
நாண்மலர் தொழுது
முகமெலாங் கண்ணீர் மல்க
முன்பணிந் தேத்துந்
அகமலாற் கோயி லில்லை
ஐயனை யாற னார்க்கே. 08

402 உமையலா துருவ மில்லை
உலகலா துடைய
நமையெலா முடைய ராவர்
நன்மையே தீமை
கமையெலா முடைய ராகிக்
கழலடி பரவுந்
கமைவிலா அருள் கொடுப்பார்
ஐயனை யாற னார்க்கே. 09

403 மலையலா லிருக்கை யில்லை
மதித்திடா அரக்கன்
தலையலால் நெரித்த தில்லை
தடவரைக் கீழ டர்த்து
நிலையிலார் புரங்கள் வேவ
நெருப்பலால் விரித்த
அலையினார் பொன்னி மன்னும்
ஐயனை யாற னார்க்கே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.41 திருச்சோற்றுத்துறை -

திருச்சிற்றம்பலம்

404 பொய்விரா மேனி தன்னைப்
பொருளெனக் காலம்
மெய்விரா மனத்த னல்லேன்
வேதியா வேத
ஐவரால் அலைக்கப் பட்ட
ஆக்கைகொண் டயர்த்துப்
செய்வரால் உகளுஞ் செம்மைத்
திருச்சோற்றுத் துறைய னாரே. 01

405 கட்டராய் நின்று நீங்கள்
காலத்தைக் கழிக்க
எட்டவாங் கைகள் வீசி
எல்லிநின் றாடு

அட்டமா மலர்கள் கொண்டே
ஆனஞ்சும் ஆட்ட
சிட்டராய் அருள்கள் செய்வார்
திருச்சோற்றுத் துறைய னாரே. 02

406 கல்லினாற் புரமூன் றெய்த
கடவுளைக் காத
எல்லியும் பகலு முள்ளே
ஏகாந்த மாக ஏத்தும்
பல்லில்வெண் டலைகை யேந்திப்
பல்லிலந் திரியுஞ்
சொல்லுநன் பொருளு மாவார்
திருச்சோற்றுத் துறைய னாரே. 03

407 கறையராய்க் கண்ட நெற்றிக்
கண்ணராய்ப் பெண்ணோர்
இறையராய் இனிய ராகித்
தனியராய்ப் பனிவெண்
பிறையராய்ச் செய்த வெல்லாம்
பீடராய்க் கேடில்
துறையராய்ப் புகுந்தெ னுள்ளச்
சோர்வுகண் டருளி னாரே. 04

408 பொந்தையைப் பொருளா வெண்ணிப்
பொருக்கெனக் காலம்
எந்தையே ஏக மூர்த்தி
யென்றுநின் றேத்த
பந்தமாய் வீடு மாகிப்
பரம்பர மாகி
சிந்தையுட் டேறல் போலுந்
திருச்சோற்றுத் துறைய னாரே. 05

409 பேர்த்தினிப் பிறவா வண்ணம்
பிதற்றுமின் பேதை
பார்த்தனுக் கருள்கள் செய்த
பாசுப தன்றி
ஆர்த்துவந் திழிவ தொத்த
அலைபுனற் கங்கை
தீர்த்தமாய்ப் போத விட்டார்
திருச்சோற்றுத் துறைய னாரே. 06

410 கொந்தார்பூங் குழலி னாரைக்
கூறியே காலம்
எந்தையெம் பிரானாய் நின்ற
இறைவனை ஏத்தா
முந்தரா அல்கு லாளை
யுடன்வைத்த ஆதி
செந்தாது புடைகள் சூழ்ந்த
திருச்சோற்றுத் துறைய னாரே. 07

411 அங்கதி ரோன வனை
அண்ணலாக் கருத
வெங்கதி ரோன் வழியே
போவதற் கமைந்து
அங்கதி ரோன வனை
யுடன்வைத்த ஆதி
செங்கதி ரோன்வ ணங்குஞ்
திருச்சோற்றுத் துறைய னாரே. 08

412 ஓதியே கழிக்கின் றீர்கள்
உலகத்தீர் ஒருவன்
நீதியால் நினைக்க மாட்டீர்
நின்மலன் என்று
சாதியா நான்மு கனுஞ்
சக்கரத் தானுங்
சோதியாய்ச் சுடர தானார்
திருச்சோற்றுத் துறைய னாரே. 09

413 மற்றுநீர் மனம்வை யாதே
மறுமையைக் கழிக்க
பெற்றதோர் உபாயந் தன்னாற்
பிரானையே பிதற்று
கற்றுவந் தரக்க னோடிக்
கயிலாய மலைஎ
செற்றுகந் தருளிச் செய்தார்
திருச்சோற்றுத் துறைய னாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.42 திருத்துருத்தி -

திருச்சிற்றம்பலம்

414 பொருத்திய குரம்பை தன்னைப்
பொருளெனக் கருத
இருத்தியெப் போதும் நெஞ்சுள்
இறைவனை ஏத்து
ஒருத்தியைப் பாகம் வைத்தங்
கொருத்தியைச் சடையில்
துருத்தியஞ் சுடரி னானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 01

415 சவைதனைச் செய்து வாழ்வான்
சலத்துளே யழுந்து
இவையொரு பொருளு மல்ல
இறைவனை ஏத்து
அவைபுர மூன்றும் எய்தும்
அடியவர்க் கருளிச்
சுவையினைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 02

416 உன்னியெப் போதும் நெஞ்சுள்
ஒருவனை ஏத்து
கன்னியை ஒருபால் வைத்துக்
கங்கையைச் சடையுள் வைத்துப்
பொன்னியின் நடுவு தன்னுள்
பூம்புனல் பொலிந்து
துன்னிய துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 03

417 ஊன்றலை வலிய னாகி
உலகத்துள் உயிர்கட்
தான்றலைப் பட்டு நின்று
சார்கன லகத்து
வான்றலைத் தேவர் கூடி
வானவர்க் கிறைவா
தோன்றலைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 04

418 உடல்தனைக் கழிக்க லுற்ற
உலகத்துள் உயிர்கட்
இடர்தனைக் கழிக்க வேண்டில்
இறைவனை ஏத்து
கடல்தனில் நஞ்ச முண்டு
காண்பரி தாகி
சுடர்தனைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 05

419 அள்ளலைக் கடக்க வேண்டில்
அரனையே நினைமி
பொள்ளலிக் காயந் தன்னுட்
புண்டரீ கத்தி
வள்ளலை வான வர்க்குங்
காண்பரி தாகி
துள்ளலைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 06

420 பாதியில் உமையாள் தன்னைப்
பாகமா வைத்த
வேதியன் என்று சொல்லி
விண்ணவர் விரும்பி
சாதியாஞ் சதுர்மு கனுஞ்
சக்கரத் தானுங்
சோதியைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 07

421 சாமனை வாழ்க்கை யான
சலத்துளே யழுந்த
தூமநல் லகிலுங் காட்டித்
தொழுதடி வணங்கு
சோமனைச் சடையுள் வைத்துத்
தொன்னெறி பலவுங்
தூமனத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்டா வாறே. 08

422 குண்டரே சமணர் புத்தர்
குறியறி யாது
கண்டதே கருது வார்கள்
கருத்தெண்ணா தொழிமி
விண்டவர் புரங்கள் எய்து
விண்ணவர்க் கருள்கள்
தொண்டர்கள் துணையி னானைத்
துருத்திநான் கண்ட வாறே. 09

423 பிண்டத்தைக் கழிக்க வேண்டிற்
பிரானையே பிதற்று
அண்டத்தைக் கழிய நீண்ட
அடலரக் கன்றன்

கண்டொத்துக் கால்வி ரலால்
ஊன்றிமீண் டருளிச்
துண்டத்துத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.43 திருக்காஞ்சிமேற்றளி -

திருச்சிற்றம்பலம்

424 மறையது பாடிப் பிச்சைக்
கென்றகந் திரிந்து
பிறையது சடைமு டிமேற்
பெய்வளை யாள்தன்
கறையது கண்டங் கொண்டார்
காஞ்சிமா நகர்தன்
இறையவர் பாட லாடல்
இலங்குமேற் றளிய னாரே. 01

425 மாலன மாயன் றன்னை
மகிழ்ந்தனர் விருத்த
பாலனார் பசுப தியார்
பால்வெள்ளை நீறு
காலனைக் காலாற் செற்றார்
காஞ்சிமா நகர்தன்
ஏலநற் கடம்பன் தாதை
இலங்குமேற் றளிய னாரே. 02

426 விண்ணிடை விண்ண வர்கள்
விரும்பிவந் திறைஞ்சி
பண்ணிடைச் சுவையின் மிக்க
கின்னரம் பாடல்
கண்ணிடை மணியி னொப்பார்
காஞ்சிமா நகர்தன்
எண்ணிடை யெழுத்து மானார்
இலங்குமேற் றளிய னாரே. 03

427 சோமனை அரவி னோடு
சூழ்தரக் கங்கை
வாமனை வான வர்கள்
வலங்கொடு வந்து
காமனைக் காய்ந்த கண்ணார்
காஞ்சிமா நகர்தன்
ஏமநின் றாடும் எந்தை
இலங்குமேற் றளிய னாரே. 04

428 ஊனவ ருயிரி னோடு
முலகங்க ளூழி
தானவர் தனமு மாகித்
தனஞ்சய னோடெ
கானவர் காள கண்டர்

காஞ்சிமா நகர்தன்
ஏனமக் கோடு பூண்டார்
இலங்குமேற் றளிய னாரே. 05

429 மாயனாய் மால னாகி
மலரவ னாகி
தேயமாய்த் திசையெட் டாகித்
தீர்த்தமாய்த் திரிதர்
காயமாய்க் காயத் துள்ளார்
காஞ்சிமா நகர்தன்
ஏயமென் றோளி பாகர்
இலங்குமேற் றளிய னாரே. 06

430 மண்ணினை யுண்ட மாயன்
தன்னையோர் பாகங்
பண்ணினைப் பாடி யாடும்
பத்தர்கள் சித்தங்
கண்ணினை மூன்றுங் கொண்டார்
காஞ்சிமா நகர்தன்
எண்ணினை யெண்ண வைத்தார்
இலங்குமேற் றளிய னாரே. 07

431 செல்வியைப் பாகங் கொண்டார்
சேந்தனை மகனாக்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை
கல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்தன்
எல்லியை விளங்க நின்றார்
இலங்குமேற் றளிய னாரே. 08

432 வேறிணை யின்றி யென்றும்
விளங்கொளி மருங்கி
கூறிய லாக வைத்தார்
கோளரா மதியும்
ஆறினைச் சடையுள் வைத்தார்
அணிபொழிற் கச்சி
ஏறினை யேறு மெந்தை
இலங்குமேற் றளிய னாரே. 09

433 தென்னவன் மலையெ டுக்கச்
சேயிழை நடுங்கக்
மன்னவன் விரலா லூன்ற
மணிமுடி நெரிய
கன்னலின் கீதம் பாடக்
கேட்டவர் காஞ்சி
இன்னவற் கருளிச் செய்தார்
இலங்குமேற் றளிய னாரே. 10

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.44 திருஏகம்பம் -

திருச்சிற்றம்பலம்

434 நம்பனை நகர மூன்றும்
எரியுண வெருவ
அம்பனை அமுதை யாற்றை
அணிபொழிற் கச்சி
கம்பனைக் கதிர்வெண் திங்கட்
செஞ்சடைக் கடவுள்
செம்பொனைப் பவளத் தூணைச்
சிந்தியா எழுகின் றேனே. 01

435 ஒருமுழம் உள்ள குட்டம்
ஒன்பது துளையு
அரைமுழம் அதன் அகலம்
அதனில்வாழ் முதலை ஐந்து
பெருமுழை வாய்தல் பற்றிக்
கிடந்துநான் பிதற்று
கருமுகில் தவழும் மாடக்
கச்சியே கம்ப னீரே. 02

436 மலையினார் மகளோர் பாக
மைந்தனார் மழுவொன்
சிலையினால் மதில்கள் மூன்றுந்
தீயெழச் செற்ற
இலையினார் சூலம் ஏந்தி
ஏகம்பம் மேவி
தலையினால் வணங்க வல்லார்
தலைவர்க்குந் தலைவர் தாமே. 03

437 பூத்தபொற் கொன்றை மாலை
புரிசடைக் கணிந்த
தீர்த்தமாங் கங்கை யாளைத்
திருமுடி திகழ வைத்து
ஏத்துவார் ஏத்த நின்ற
ஏகம்பம் மேவி
வாழ்த்துமா றறிய மாட்டேன்
மால்கொடு மயங்கி னேனே. 04

438 மையினார் மலர்நெ டுங்கண்
மங்கையோர் பங்க
கையிலோர் கபாலம் ஏந்திக்
கடைதொறும் பலிகொள்
எய்வதோர் ஏனம் ஓட்டி
ஏகம்பம் மேவி
கையினாற் றொழவல் லார்க்குக்
கடுவினை களைய லாமே. 05

439 தருவினை மருவுங் கங்கை
தங்கிய சடையன்
அருவினை அகல நல்கும்
அண்ணலை அமரர்
திருவினைத் திருவே கம்பஞ்
செப்பிட உறைய
உருவினை உருகி ஆங்கே
உள்ளத்தால் உக்கின் றேனே. 06

440 கொண்டதோர் கோல மாகிக்
கோலக்கா வுடைய
உண்டதோர் நஞ்ச மாகில்
உலகெலாம் உய்ய
எண்டிசை யோரும் ஏத்த
நின்றஏ கம்பன்
கண்டுநான் அடிமை செய்வான்
கருதியே திரிகின் றேனே. 07

441 படமுடை அரவி னோடு
பனிமதி யதனைச்
கடமுடை யுரிவை மூடிக்
கண்டவர் அஞ்ச
இடமுடைக் கச்சி தன்னுள்
ஏகம்பம் மேவி
நடமுடை யாடல் காண
ஞாலந்தான் உய்ந்த வாறே. 08

442 பொன்றிகழ் கொன்றை மாலை
பொருந்திய நெடுந்தண்
நன்றியிற் புகுந்தெ னுள்ளம்
மெள்ளவே நவில
குன்றியில் அடுத்த மேனிக்
குவளையங் கண்டர்
இன்றுயில் போது கண்டார்
இனியர்ஏ கம்ப னாரே. 09

443 துருத்தியார் பழனத் துள்ளார்
தொண்டர்கள் பலரும்
அருத்தியால் அன்பு செய்வார்
அவரவர்க் கருள்கள்
எருத்தினை இசைய ஏறி
ஏகம்பம் மேவி
வருத்திநின் றடிமை செய்வார்
வல்வினை மாயு மன்றே. 10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.45 திருவொற்றியூர் -

திருச்சிற்றம்பலம்

444 வெள்ளத்தைச் சடையில் வைத்த
வேதகீ தன்றன்
மெள்ளத்தான் அடைய வேண்டின்
மெய்தரு ஞானத்
கள்ளத்தைக் கழிய நின்றார்
காயத்துக் கலந்து
உள்ளத்துள் ஒளியு மாகும்
ஒற்றியூ ருடைய கோவே. 01

445 வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா
வானவர் இறைவன்
புசிப்பதோர் பொள்ள லாக்கை
யதனொடும் புணர்வு

அசிர்ப்பெனும் அருந்த வத்தால்
ஆன்மாவி னிடம
உசிர்ப்பெனும் உணர்வு முள்ளார்
ஒற்றியூ ருடைய கோவே. 02

446 தானத்தைச் செய்து வாழ்வான்
சலத்துளே அழுந்து
வானத்தை வணங்க வேண்டில்
வம்மின்கள் வல்லீ
ஞானத்தை விளக்கை ஏற்றி
நாடியுள் விரவ
ஊனத்தை ஒழிப்பர் போலும்
ஒற்றியூ ருடைய கோவே. 03

447 காமத்துள் அழுந்தி நின்று
கண்டரால் ஒறுப்புண்
சாமத்து வேத மாகி
நின்றதோர் சயம்பு
ஏமத்தும் இடையி ராவும்
ஏகாந்தம் இயம்பு
ஓமத்துள் ஒளிய தாகும்
ஒற்றியூ ருடைய கோவே. 04

448 சமையமே லாறு மாகித்
தானொரு சயம்பு
இமையவர் பரவி யேத்த
இனிதினங் கிருந்த
கமையினை யுடைய ராகிக்
கழலடி பரவு
உமையொரு பாகர் போலும்
ஒற்றியூ ருடைய கோவே. 05

449 ஒருத்திதன் றலைச்சென் றாளைக்
கரந்திட்டான் உலக
ஒருத்திக்கு நல்ல னாகி
மறுப்படுத் தொளித்து
ஒருத்தியைப் பாகம் வைத்தான்
உணர்வினால் ஐயம்
ஒருத்திக்கு நல்ல னல்லன்
ஒற்றியூ ருடைய கோவே. 06

450 பிணமுடை உடலுக் காகப்
பித்தராய்த் திரிந்து
புணர்வெனும் போகம் வேண்டா
போக்கலாம் பொய்யை
நிணமுடை நெஞ்சி னுள்ளால்
நினைக்குமா நினைக்கின்
உணர்வினோ டிருப்பர் போலும்
ஒற்றியூ ருடைய கோவே. 07

451 பின்னுவார் சடையான் தன்னைப்
பிதற்றிலாப் பேதை
துன்னுவார் நரகந் தன்னுள்
தொல்வினை தீர
மன்னுவான் மறைக ளோதி
மனத்தினுள் விளக்கொன்
உன்னுவார் உள்ளத் துள்ளார்
ஒற்றியூ ருடைய கோவே. 08

452 முள்குவார் போகம் வேண்டின்
முயற்றியா லிடர்கள்
எள்குவார் எள்கி நின்றங்
கிதுவொரு மாய
பள்குவார் பத்த ராகிப்
பாடியு மாடி
உள்குவார் உள்ளத் துள்ளார்
ஒற்றியூ ருடைய கோவே. 09

453 வெறுத்துகப் புலன்க ளைந்தும்
வேண்டிற்று வேண்டு
மறுத்துக ஆர்வச் செற்றக்
குரோதங்க ளான
பொறுத்துகப் புட்ப கத்தேர்
உடையானை அடர
ஒறுத்துகந் தருள்கள் செய்தார்
ஒற்றியூ ருடைய கோவே. 10

இத்தலம் தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.46 திருவொற்றியூர் -

திருச்சிற்றம்பலம்

454 ஓம்பினேன் கூட்டை வாளா
உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக்
கருதிற்றே முகக்க
பாம்பின்வாய்த் தேரை போலப்
பலபல நினைக்கின்
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்
ஒற்றியூ ருடைய கோவே. 01

455 மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய
துனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூ ருடய கோவே. 02

இப்பதிகத்தில் ஏனைய செய்யுட்கள்
சிதைவுற்றன. 3-10

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.47 திருக்கயிலாயம் -

திருச்சிற்றம்பலம்

456 கனகமா வயிர முந்து
மாமணிக் கயிலை
உனகனா யரக்க னோடி
யெடுத்தலு முமையா
அனகனாய் நின்ற ஈச
னூன்றலு மலறி
மனகனா யூன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 01

457 கதித்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை
அதிர்த்தவன் எடுத்தி டலும்
அரிவைதான் அஞ்ச
நெதித்தவ னூன்றி யிட்ட
நிலையழிந் தலறி
மதித்திறை யூன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 02

458 கறுத்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையைக்
மறித்தலும் மங்கை அஞ்ச
வானவர் இறைவன்
நெறித்தொரு விரலா லூன்ற
நெடுவரை போல
மறித்திறை யூன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 03

459 கடுத்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை
எடுத்தலும் மங்கை அஞ்ச
இறையவ னிறையே
நொடிப்பள விரலா லூன்ற
நோவது மலறி
மடித்திறை யூன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 04

460 கன்றித்தன் கண்சி வந்து
கயிலைநன் மலையை
வென்றித்தன் கைத்த லத்தா
லெடுத்தலும் வெருவ
நன்றுத்தான் நக்கு நாத
னூன்றலு நகழ
மன்றித்தான் ஊன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 05

461 களித்தவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை
நெளித்தவ னெடுத்தி டலும்
நேரிழை அஞ்ச
வெளித்தவ னூன்றி யிட்ட
வெற்பினா லலறி
மளித்திறை யூன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 06

462 கருத்தனாய்க் கண்சி வந்து
கயிலைநன் மலையைக்
எருத்தனாய் எடுத்த வாறே
ஏந்திழை அஞ்ச
திருத்தனாய் நின்ற தேவன்
திருவிர லூன்ற
வருத்துவான் ஊன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 07

463 கடியவன் கண்சி வந்து
கயிலைநன் மலையை
வடிவுடை மங்கை அஞ்ச
எடுத்தலும் மருவ
செடிபடத் திருவி ரலா
லூன்றலுஞ் சிதைந்து
வடிவுற வூன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 08

464 கரியத்தான் கண்சி வந்து
கயிலைநன் மலையைப்
இரியத்தான் எடுத்தி டலும்
ஏந்திழை அஞ்ச
நெரியத்தான் ஊன்றா முன்னம்
நிற்கிலா தலறி
மரியத்தான் ஊன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 09

465 கற்றனன் கயிலை தன்னைக்
காண்டலும் அரக்கன்
செற்றவன் எடுத்த வாறே
சேயிழை அஞ்ச
உற்றிறை ஊன்றா முன்னம்
உணர்வழி வகையால்
மற்றிறை ஊன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே. 10

இத்தலம் வடநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.48 திருஆப்பாடி -

திருச்சிற்றம்பலம்

466 கடலகம் ஏழி னோடும்
புவனமுங் கலந்த
உடலகத் துயிரும் பாரும்
ஒள்ளழ லாகி
தடமலர்க் கந்த மாலை
தண்மதி பகலு
மடலவிழ் கொன்றை சூடி
மன்னும்ஆப் பாடி யாரே. 01

467 ஆதியும் அறிவு மாகி
அறிவினுட் செறிவு
சோதியுட் சுடரு மாகித்
தூநெறிக் கொருவ
பாதியிற் பெண்ணு மாகிப்
பரவுவார் பாங்க
வேதியர் வாழுஞ் சேய்ஞல்
விரும்பும்ஆப் பாடி யாரே. 02

468 எண்ணுடை இருக்கு மாகி
யிருக்கினுட் பொருளு
பண்ணொடு பாடல் தன்னைப்
பரவுவார் பாங்க
கண்ணொரு நெற்றி யாகிக்
கருதுவார் கருத
பெண்ணொரு பாக மாகிப்
பேணும்ஆப் பாடி யாரே. 03

469 அண்டமார் அமரர் கோமான்
ஆதியெம் அண்ணல்
கொண்டவன் குறிப்பி னாலே
கூப்பினான் தாப
கண்டவன் தாதை பாய்வான்
காலற எறியக்
தண்டியார்க் கருள்கள் செய்த
தலைவர்ஆப் பாடி யாரே. 04

470 சிந்தையுந் தெளிவு மாகித்
தெளிவினுட் சிவமு
வந்தநற் பயனு மாகி
வாணுதல் பாக
மந்தமாம் பொழில்கள் சூழ்ந்த
மண்ணித்தென் கரைமேல்
அந்தமோ டளவி லாத
அடிகள்ஆப் பாடி யாரே. 05

471 வன்னிவா ளரவு மத்தம்
மதியமும் ஆறுஞ்
மின்னிய உருவாஞ் சோதி
மெய்ப்பொருட் பயனு
கன்னியோர் பாக மாகிக்
கருதுவார் கருத்து
இன்னிசை தொண்டர் பாட
இருந்தஆப் பாடி யாரே. 06

472 உள்ளுமாய்ப் புறமு மாகி
உருவுமாய் அருவு
வெள்ளமாய்க் கரையு மாகி
விரிகதிர் ஞாயி
கள்ளமாய்க் கள்ளத் துள்ளார்
கருத்துமாய் அருத்த
அள்ளுவார்க் கள்ளல் செய்திட்
டிருந்தஆப் பாடி யாரே. 07

473 மயக்கமாய்த் தெளிவு மாகி
மால்வரை வளியு
தியக்கமாய் ஒருக்க மாகிச்
சிந்தையுள் ஒன்றி

இயக்கமாய் இறுதி யாகி
எண்டிசைக் கிறைவ
அயக்கமாய் அடக்க மாய
ஐவர்ஆப் பாடி யாரே. 08

474 ஆரழல் உருவ மாகி
அண்டமேழ் கடந்த
பேரொளி உருவி னானைப்
பிரமனும் மாலுங்
சீரவை பரவி யேத்திச்
சென்றடி வணங்கு
பேரருள் அருளிச் செய்வார்
பேணும்ஆப் பாடி யாரே. 09

475 திண்டிறல் அரக்க னோடிச்
சீகயி லாயந்
எண்டிறல் இலனு மாகி
எடுத்தலும் ஏழை
விண்டிறல் நெறிய வூன்றி
மிகக்கடுத் தலறி
பண்டிறல் கேட்டு கந்த
பரமர்ஆப் பாடி யாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

******************************

## 4.49 திருக்குறுக்கை -

திருச்சிற்றம்பலம்

476 ஆதியிற் பிரம னார்தாம்
அர்ச்சித்தார் அடியி
ஓதிய வேத நாவர்
உணருமா றுணர
சோதியுட் சுடராய்த் தோன்றிச்
சொல்லினை யிறந்தார்
கோதிவண் டறையுஞ் சோலைக்
குறுக்கைவீ ரட்ட னாரே. 01

477 நீற்றினை நிறையப் பூசி
நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டும்
அந்தண னாரைக்
சாற்றுநாள் அற்ற தென்று
தருமரா சற்காய்
கூற்றினைக் குமைப்பர் போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. 02

478 தழைத்ததோர் ஆத்தி யின்கீழ்த்
தாபர மணலாற்
அழைத்தங்கே ஆவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக்
பிழைத்ததன் றாதை தாளைப்

பெருங்கொடு மழுவால்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 03

479 சிலந்தியும் ஆனைக் காவிற்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச்செங்க ணானு
கலந்தநீர்க் காவி ரிசூழ்
சோணாட்டுச் சோழர்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 04

480 ஏறுடன் ஏழ டர்த்தான்
எண்ணியா யிரம்பூக்
ஆறுடைச் சடையி னானை
அர்ச்சித்தான் அடியி
வேறுமோர் பூக்கு றைய
மெய்ம்மலர்க் கண்ணை
கூறுமோர் ஆழி ஈந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 05

481 கல்லினால் எறிந்து கஞ்சி
தாமுணுஞ் சாக்கி
நெல்லினார் சோறு ணாமே
நீள்விசும் பாள
எல்லியாங் கெரிகை ஏந்தி
எழில்திகழ் நட்ட
கொல்லியாம் பண்ணு கந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 06

482 காப்பதோர் வில்லும் அம்புங்
கையதோர் இறைச்சிப்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலசம்
தீப்பெருங் கண்கள் செய்யக்
குருதிநீர் ஒழுகத்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 07

483 நிறைமறைக் காடு தன்னில்
நீண்டெரி தீபந்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டவா னுலக
குறைவறக் கொடுப்பர் போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. 08

484 அணங்குமை பாக மாக
அடக்கிய ஆதி
வணங்குவார் இடர்கள் தீர்க்கும்
மருந்துநல் அருந்த
கணம்புல்லர்க் கருள்கள் செய்து
காதலாம் அடியார்க்
குணங்களைக் கொடுப்பர் போலுங்
குறுக்கைவீ ரட்ட னாரே. 09

485 எடுத்தனன் எழிற் கயிலை
இலங்கையர் மன்னன்
அடுத்தொரு விரலால் ஊன்ற
அலறிப்போய் அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைந ரம்பால்
வேதகீ தங்கள்
கொடுத்தனர் கொற்ற வாணாள்
குறுக்கைவீ ரட்ட னாரே. 10

இத்தலம் சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் -
தேவியார் -

திருச்சிற்றம்பலம்

*******************************

## 4.50 திருக்குறுக்கை -

திருச்சிற்றம்பலம்

486 நெடியமால் பிரம னோடு
நீரெனும் பிலயங்
அடியொடு முடியுங் காணார்
அருச்சுனற் கம்பும்
துடியுடை வேட ராகித்
தூயமந் திரங்கள்
கொடிநெடுந் தேர்கொ டுத்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 01

487 ஆத்தமாம் அயனு மாலும்
அன்றிமற் றொழிந்த
சோத்தமெம் பெருமான் என்று
தொழுதுதோத் திரங்கள்
தீர்த்தமாம் அட்ட மிமுன்
சீருடை ஏழு
கூத்தராய் வீதி போந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே. 02

இப்பதிகத்தில் ஏனைய செய்யுட்கள்
சிதைவுற்றன. 03-10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

நான்காம் திருமுறை முதற் பகுதி

*******************************